கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
மாதம் இருமுறை
4-2-1973
30 காசு





ஆண்,
ஆளப்பிறந்தவன்.
அவன் துணைவி,
அவனது இதயராணி.
பிள்ளைக் கனியமுது,
பேசும் பொற் சித்திரம்.

இல்லறத்தின்
சுவைக்களனில்
மலர்ந்தவை,
மபத்லால்
துணிமணிகள்!

மெஃப்ரின் எஸ்டர்காட் டெரோஸெல்

எளிய சாயல்களிலும்,
எடுப்பான வண்ணங்களிலும்,
பெருமித பிரிண்டுகளிலும்
'மெ:ப்ரின்' 100% பாலியெஸ்டர்,
சேலைகள், பாலியெஸ்டர்
இழைகலந்த காட்டன் சேலைகள்;
'மெ:ப்ரின்' பாலியெஸ்டர்
இழைகலந்த உடுப்புத்
துணிகள் — இலேசான லான்கள்,
கோடை நிழல் படரும்
கேம்ப்ரிக்குகள், கோலாகல
நகை மிளிரும் பாப்ளின்கள்;
இன்னெளி மிளிரும்
வண்ணங்களிலே, வரிகளிலே,
கட்டங்களிலே 'எஸ்டர்காட்'
பாலியெஸ்டர் இழைகலந்த
காட்டன் சூட்டிங்குகள்; அதி
நவீனமான அரும்பெரும் அழகு
வண்ணங்களில், பிரிண்டுகளில்
'டெரோஸெல்' பாலியெஸ்டர்
இழைகலந்த காட்டன்
ஷர்ட்டிங்குகள்.

**மபத்லால்
க்ரூப்**

AIYARS-M,174 TM


மணி & மினி



"...பா, தெருவிலே புதுசா மாட்டி...
...க்கிற சீட்டு தினம் ராத்திரி
...தூக்கத்தைக் கெடுக்கிறதுன்னு
...ன்னே இல்லே ?......"

கோகுலம்

மலர் 1 :: இதழ் 21
பிப்ரவரி 4, 1973
பரிதாபி, தை 22




உயிர்களிடத்து அன்பு
வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்

— பாரதியார்

அட்டைப் படம்:

"நாயே உனக்குக்
கோபம்...ஆகாதடி"

வண்ணப்படம்:
எஸ். என். ராவ்



"என்னப்பா நீ! சாதாரணமாத்
தானே கூப்பிட்டே...
கோபமாக் கூப்பிடல்லியேன்னு
நான் உடனே வரல்லே!"

எழில் கொஞ்சும் எடுப்பான உருவம்

எந்த உறுப்பும் ஆற்றலின் வடிவம்!

2-பாண்டு பிலெட்டீனா

புதிய பிலெட்டீனா

2-பாண்டுகள், ரூ. 177/-
எக்சைஸ் உள்பட மற்ற வரிகள் தனி



பிலிப்ஸ்

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

CMPR-213-162 Tam



ஆத்திசூடி ராஜாஜி



பீடுபெற நில்

பீடு — பெருமை.

எந்த நிலையிலும் பெருமை அடையும்படியே பேச்சும் செயலும் இருக்க வேண்டும். பெரும் பதவியோ, பெருஞ் செல்வமோ அல்லது தாழ்வோ வறுமையோ அடைந்தாலும் இழிவான செயல்களைச் செய்யக் கூடாது. கால பேதங்கள் உண்டானாலும் இவன் பெருங் குணத்தை உடையவன் என்று பிறர் சொல்லும் வகையிலேயே நாம் மாறாமல் நிற்க வேண்டும்.

புகழ்ந்தாரைப் போற்றி வாழ்

புகழ்ந்தார் — உலகம் புகழ்ந்தார் — பெரியவர்கள். அப்பெரியவர்களைக் காப்பாற்றுவாய். உன் வாழ்வை நடத்துவதுடன் உலகம் புகழும் பெரியவர்களுக்கு வேண்டிய உதவி உன்னால் ஆன அளவுக்குச் செய்து அவர்களைப் பசியும் பிணியும் வருத்தாமல் பாதுகாப்பாயாக.

பூமி விரும்பு

நீ பயிரிடும் புலத்தின் மேல் அன்பு செலுத்து. அதாவது அதைச் சரியாய்ப் பாதுகாத்து வருவாய். உரம் போட்டு உழுது சீர்திருத்தி வர வேண்டும்.

பெரியாரைத் துணைகொள்


பெரியோர் என்றால் இயற்கையாக உயர்ந்த குணம் படைத்தவர்களும் வயதினால் வரும் உலக அனுபவத்தாலும் கல்வி, கேள்விகளாலும் அறிவு அடைந்தவர்கள். பெரியோர்களை அடைந்து அவர்களுடைய உபதேசம், உதவி இவைகளைக் கொள்வாயாக.

பேதைமை அகற்று

பேதைமை — உலக அநுபவத்தால் நீங்கும் அறியாமை.

ஜனங்களுடன் பழகியும் மற்ற வழிகளிலும் உலக அநுபவம் அடைந்து அறியாமையை நீக்கிக் கொள்வாய்.









கண்ணன் கனியமுதம்

திருமுருக கிருபானந்த வாரியார்

நெருப்பை விழுங்கிய நிமலன்

ஒரு நாள் பலராமரும் கண்ண பிரானும் கோபாலர்களுடன் கோகுலங்களை மேய்க்கும் பொருட்டுக் கானகம் சென்றார்கள். அது கடுங் கோடையானதால் பசுக் குலங்கள் தண்ணீரை வேண்டி, ''அம்மா! அம்மா!'' என்று அரற்றிக் கொண்டு இஷிக வனத்தைத் தாண்டிச் சென்றன.

அங்கே காட்டுத் தீ சுடர் விட்டு எழுந்து எரிந்து பசுக் குலங்களைத் துன்புறுத்தின. எம்பெருமான் அங்கு விரைந்து சென்றார். கோபாலர்களும் உடன் சென்றார்கள். காட்டுத் தீயினைக் கண்டு அனைவரும், ''ஆ! ஆ!'' என்று அலறி அழுதார்கள். பரந்தாமன், பசுக்களையும், தம் பக்தர்களையும் காக்கும் பொருட்டு, அக்காட்டுத் தீயைப் பால் பாயசம் பருகுவார் போலே விழுங்கி அருள் செய்தார். இந்த அதிசயத்தைக் கண்ட அவர்கள் கண்ணபிரானுடைய வண்ண மலர்த் தாளில் வீழ்ந்து துதி செய்தார்கள்.

வேணுகோபாலர் வேய்ங்குழல் ஊதி வெப்பத்தைத் தணித்தருளினார். ''ஆயர்களே! நீங்கள் ஒரு கணம் கண்களை மூடிக் கொள்ளுங்கள்'' என்றார். ஆயர்கள் கண்களை மூடினார்கள். அடுத்த கணம் திறந்தவுடன் முன்போல் தாங்கள் இருந்த வனத்தில் இருக்கக் கண்டு விம்மிதம் அடைந்தார்கள்.

யமுனைக் கரையில் வேதங்களும் காணாத பாதங்களை உடைய பரமன், தனது பவள வாயில் புல்லாங்குழலை வைத்துக் கான மழை பொழிந்தார். அதனைச் செவிமடுத்த ஐந்து லட்சம் கோபியர்கள், தம்வசம் இழந்து பரவசமாகிப் பரந்தாமனிடம் வந்து, அவரை அணைத்து உவந்து உருகி நின்றார்கள்.

ஏமந்த ருதுவாகிய பனிக் காலம் வந்தது. தநுர் மாதமாகிய மார்கழியில் தங்களுடைய குல தெய்வமாகிய காத்யாயனியை விரதம் இருந்து வழிபடுமாறு நந்தகோபன் முதலிய யது குலத் தலைவர்கள் பெண்மணிகளுக்கு ஆணையிட்டார்கள்.

கோபால கன்னியாகப் பெண்கள் கண்ணபிரானைக் கணவனாக வரித்து, மார்கழி மாத விடியற்காலையில், ஒருவரையொருவர் துயில் உணர்த்தி, கண்ணனுடைய புகழைப் பாடியும் ஆடியும் யமுனையாற்றில் நீராடி, ஆற்றங் கரை — மணலில் கௌரியின் வடிவத்தை அமைத்து, மஞ்சள் குங்குமம் இட்டு, பழம் பால் இவைகளை நிவேதித்துப் பாவை நோன்பு நோற்றார்கள்.

விரதம் பூர்த்தியடைகின்ற இறுதி நாள் கோபிகைகள், அதிகாலையில் கொட்டுகின்ற பனிக்கு இடையில், யமுனாநதி சென்று, தங்களின் அதிவிசித்திரமான ஆடைகளைக் களைந்து கரையில்

வைத்து, நதியில் இறங்கி நீராடினார்கள். ஒருவர் மீது ஒருவர் நீரை இறைத்தும், ஒருவருடைய கூந்தலை ஒருவர் தொட்டு ஈர்த்தும், ஒருவர் வாய் நீரை ஒருவர் மீது உமிழ்ந்து, கண்ணனே கணவனாக வரவேண்டும் என்று கனியமுதம் போன்ற பாடலைப் பாடியும் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

மாயகிருஷ்ணர் அப்போது, மெல்லச் சந்தடியின்றி அடி மேல் அடிவைத்துப் பதுங்கி ஒதுங்கி வந்து கோபிகைகளின் ஆடைகள் அனைத்தையும் சுருட்டிக் கொண்டு, ஒரு மரத்தின் மீது ஏறி அமர்ந்து கொண்டார்.

கன்னிகா மாதர்கள் நீராடியபின் கரையேறி, தமது ஆடைகளைக் காணாது திடுக்கிட்டு மனங்கலங்கிப் போனார்கள். ''மனித சஞ்சாரமில்லாத இடத்தில் நம் உடைகள் எப்படி மறைந்தன? இது என்ன அதிசயம்?'' என்று பேசிக் கொண்டார்கள். மரத்தின் மீது ஆடைகளுடன் அமர்ந்திருந்த அரி முகுந்தனை ஒருத்தி கண்டாள். ''ஆ, இதோ! நம் உள்ளத்தைக் கவர்ந்த பகவான் நமது உடைகளையும் கவர்ந்து நம்மைப் பரிகசிக்கின்றார்'' என்றாள். அத்தனை பேரும் நாணிக் கோணி நதியில் இறங்கிக் கழுத்தளவு நீரில் நின்றார்கள். குளிர் தாங்க முடியவில்லை.

''கண்ணா! மணிவண்ணா! இது உனக்கு நியாயமா? எமது உணர்வைத்தான் திருடினாயே! உடைகளையும் திருடலாமா? இது முறையா? இது தருமா? பெண்கள் நீராடுகின்ற இடத்துக்கு ஆண்கள் வரலாமா? எங்கள் துணிகளை நீ தீண்டலாமா? உன்னை உலகம் பழிக்கும். எங்களது ஆடைகளைத் தருவாய்'' என்று கெஞ்சிக் கேட்டார்கள்.

பகவான், ''ஏ, மாதர் சிகாமணிகளே! விரதமிருந்து கௌரியை வழிபடுகின்ற நீங்கள் ஆடையின்றி நதியில் நீராடலாமா? இது பெரும் பிழை. இவ்வினை தீரக் கரையேறி உச்சிமேற் கரங்கூப்பி வணங்கினால் உங்கள் ஆடைகளைத் தருவேன்'' என்றார்.

''கண்ணா! நீ கூறுவது நியாயமன்று. எங்கள் ஆடையைக் கொடு, உடுத்திக் கொண்டு வந்து கும்பிடுகின்றோம். குளிர் தாங்க முடியவில்லை. உடல் நடுங்குகின்றது. கருணை செய். உடைகளைக் கொடுத்து விடு.''


''பேதைப் பெண்களே! பாவம்தீரப் பணிந்தாலன்றி உடைகளை உதவ மாட்டேன்.''

சிலர் மலர்களால் உடம்பை மறைத்துக் கொண்டு வணங்கினார்கள். கரங்களால் உடம்பை மறைத்துக் கொண்டு கும்பிட்டார்கள் இன்னும் சிலர்.


பகவான், ''சரீர வாசனை மறந்து வணங்குங்கள். அப்போதுதான் பாவம் தீரும்'' என்றார்.

கோபியர்கள் அவ்வாறே கரை யேறிக் கரங்களைச் சிரங்கள் மீது குவித்து வணங்கி நின்றார்கள். ஆயர் குலக் கொழுந்தாகிய கண்ணன் அவர்களின் ஆடைகளைக் கொடுத்தருளினார்.

அவர்கள் உடை உடுத்திக் கொண்டு கௌரியை வணங்கி வழிபட்டுத் தத்தம் இருப்பிடம் சேர்ந்தார்கள். (தொடரும்)







வெற்றியின் இரகசியம்

ரொம்ப ரொம்ப வருஷங்களுக்கு முன்னாலே ஒரு குடியானவன் வாழ்ந்து வந்தான். அவன் பெயர் காத்தான். சூதுவாது அறியாத நல்லவன். உழைப்பாளி. அவனுக்கென்று கொஞ்சம் நிலம் இருந்தது. அதில் பாடுபட்டு உழைப்பான். தன் எஜமானரான பண்ணை பரமசிவத்தைப் போலப் பெரிய பணக்காரராக முடியாவிட்டாலும் பட்டினி கிடக்காமல் பசித்த வயிற்றுக்கு உணவு கிடைக்கும்படியான வாழ்க்கைக்குத்தான் அவன் ஆசைப்பட்டான். ஆனால் பாவம், காத்தானின் ஆசை, கனவாகத்தான் போயிற்று. அந்த வருஷம் மழை பெய்யவில்லை. காத்தானின் நிலத்தில் எதுவும் விளையவில்லை. ''இந்த வருஷம் பொங்கல் பண்டிகைக்கு என் வீட்டில் பால் பானை பொங்காது. பசித்த வயிற்றோடு நான் இருந்தாலும் பகவானுக்குப் படைக்காமல் இருக்கலாமா? எஜமானரிடம் போய் இரண்டு கலம் நெல் கடனாகக் கேட்டுப் பார்க்கலாம்'' என்று பண்ணை பரமசிவத்திடம் போய்க் கூனிக் குறுகியபடி தன் விருப்பத்தைத் தெரிவித்தான். பரமசிவம் அன்று மகிழ்ச்சியோடு இருந்தார். காரணம், மழை பெய்யாமல் ஊரில் பஞ்சம் பட்டினியாக இருந்தாலும் அவர் நிலத்தில் மட்டும் விளைந்திருந்தது. வற்றாத கிணறு அவர் நிலத்தில் இருந்ததால் சாகுபடி சக்கைப் போடு போட்டிருந்தது. அந்தக் குஷியில் பரமசிவம் காத்தானுக்கு இரண்டு கலம் நெல்லை அளந்து கொடுத்தார். ''பொங்கலுக்குப் படையல் வை. குஷியாகச் சாப்பிடு, போ!'' என்று அவனுக்கு ஆசி வேறு வழங்கினார்.

'' அடுத்த வெள்ளாமையிலே ஐயாவுக்கு இதைத் திருப்பிக் கொடுத்திடறேனுங்க !'' என்று கூறியபடி காத்தான் நெல் மூட்டையோடு வீட்டுக்கு வந்தான். மனைவி கருப்பாயிக்கும் அந்த வருடம் பொங்கல் பானை எடுக்க முடிந்ததில் மகிழ்ச்சி.

நாட்கள் நகர்ந்தன. அடுத்த ஆண்டு நல்ல மழை. காத்தான் நிலத்திலும் நல்ல விளைச்சல். சொன்ன சொல்லைக் காப்பாற்றக் கூடிய பண்பாளன் காத்தான். பரமசிவத்திடம் வாங்கிய இரண்டு கலம் நெல்லையும் ஒரு மூட்டையாகக் கட்டிக் கொண்டு அவரிடம்

வாண்டு மாமா

போனான். இவன் போன வேளை சரியில்லை. பரமசிவம் ஒரே கோபமாக இருந்தார். ஊரார் சந்தோஷமாக இருந்தால் சிலருக்குப் பிடிக்காது. அப்படிப்பட்டவர்களில் இவரும் ஒருவர். எல்லோருடைய காணி கரைகளிலும் நல்ல விளைச்சல் அவருக்கு எரிச்சலைக் கொடுத்திருந்தது. இப்போது காத்தான் பயல் வாங்கிய கடன் நெல்லைத் திருப்பிக் கொடுக்க வந்திருப்பது ஏனோ அவருக்கு ஆத்திரத்தை மூட்டியது. ''போடா, உன் நெல்லைக் கொண்டு போய்ச் சங்கிலியாண்டிக் கோட்டையிலே கொட்டு போ. இவரு பெரிய சத்தியசந்தரு. வாங்கின நெல்லைத் திருப்பித் தர வந்துட்டாரு'' என்று கூச்சல் போட்டார் பரமசிவம்.

காத்தான் ஓர் அப்பாவி. நல்ல குணம் படைத்தவர்களே அப்பாவியாகத்தான் இருப்பார்கள் போலும்! எஜமான் நிஜமாகத்தான் சொல்கிறாராக்கும் என்று நெல் மூட்டையுடன் சங்கிலியாண்டிக் கோட்டையை நோக்கிப் பயணமானான்.

அந்த ஊரின் எல்லையில் ஓர் அடர்ந்த கானகம். அதன் நடுவே ஒரு பெரிய மலை. அதில் பாழடைந்த கோட்டை. முன்பு ஆட்சி செலுத்திய அரசர்கள் ஆவி உருவில் அங்கு வசிப்பதாக மக்கள் நம்பினார்கள். யாருமே அந்தக் காட்டுக்குள்ளேயோ மலைமீதோ போனதே இல்லை. சங்கிலியாண்டிக் கோட்டையைப் பற்றியும் அதில் வசிக்கும் ஆவி உருவ அரசர்களைப் பற்றியும் எத்தனையோ கதைகள்!

காத்தான் எஜமானரின் உத்தரவைச் சிரமேற்கொண்டு நெல் மூட்டையைத் தலையின் மேல் சுமந்தபடி கோட்டையிலிருக்கும் ஆவி அரசனிடம் அந்த நெல்லைச் சமர்ப்பிக்கப் போய்க் கொண்டிருந்தான். அது நெடுந்தூரப் பயணம். வழியில் ஒருவனைச் சந்தித்தான். தலையில் மூட்டையுடன் வரும் காத்தானைக் கண்ட அந்த அந்நியன், ''இந்தப் பக்கம் எங்கே போகிறாய்?'' என்று கேட்டான்.

''என் எஜமானர் சங்கிலியாண்டிக் கோட்டையில் உள்ள ராஜாவிடம் இந்த நெல்லைக் கொடுக்கும்படி சொன்னார். அதற்காகப் போய்க் கொண்டிருக்கிறேன். நான் சரியான பாதையில் தானே செல்கிறேன்? உங்களுக்கு அந்தக் கோட்டைக்கு வழி தெரிந்தால் சொல்லுங்களேன்'' என்று கேட்டான் காத்தான்.

''சரியான வழியில்தான் போகிறாய். இதே ஒற்றையடிப் பாதை வழியே



போனால் சங்கிலியாண்டிக் கோட்டை வாசலுக்குத்தான் போய் நிற்பாய்'' என்று கூறிப் போனான் அந்த வழிப் போக்கன்.

வளைந்து வளைந்து செல்லும் ஒற்றையடிப் பாதையில் நடந்து கொண்டே இருந்தான் காத்தான். பல காவதங்கள் கடந்தபின் சங்கிலியாண்டிக் கோட்டையின் மதில்சுவர் தூரத்தில் தெரிந்தது. கோட்டை வாசலுக்குப் போனபோது அங்கு காவல் ஏதுமில்லை.

கோட்டையின் உள்ளே அரண்மனையின் நுழை வாசலின் முன்னால் கையில் வேல் பிடித்த ஆஜானுபாகுவாக ஒரு காவல்காரன் நிற்பது தெரிந்தது. அந்த ராட்சதக் காவலாளி தன் இடிக் குரலில், ''நீ யார்? இங்கு எதற்காக வந்தாய்?'' என்று கேட்டான்.

''நான் காத்தான். என் எஜமானர் பரமசிவம் இந்த நெல்லை உங்கள் அரசரிடம் கொடுக்கச் சொன்னார். அதற்காக வந்திருக்கிறேன்'' என்றான்.



காத்தானின் அப்பாவித்தனத்தையும், தைரியத்தையும் கண்ட அந்தக் காவலாளி, ''சரி! நீ உள்ளே போகலாம். உன் காணிக்கைக்கு மகிழ்ந்து அரசர் உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டால் சங்கிலியாண்டியின் மாயப் படியைக் கேட்டு வாங்கு'' என்று கூறி அனுப்பினான்.

அரண்மனைக்குள் நுழைந்து பல கூடங்களையும் கடந்து போனான் காத்தான். முடிவில் ஒரு பெரிய கூடத்தின் கோடியில் சிங்காதனத்தில் சங்கிலியாண்டி உட்கார்ந்திருந்தார். அவரைத் தலை நிமிர்ந்து காணவே காத்தானுக்குத் தைரியமில்லை. மண்டியிட்டு வணங்கி நெல் மூட்டையை வைத்துத்தான் வந்த காரணத்தைக் கூறினான்.

வெகுளியான காத்தானின் நல்ல குணத்தைக் கண்ட சங்கிலியாண்டி, ''உன் எஜமானர் அனுப்பிய காணிக்கைக்கு மகிழ்ச்சி. எனக்காக இதை இத்தனை தூரம் சுமந்து வந்துகொடுத்த உனக்கு என்ன வேண்டுமோ கேள், தருகிறேன்'' என்றார்.

''நீங்கள் இத்தனை அன்போடு வற்புறுத்துவதானால் உங்களிடம் உள்ள மாயப் படியைக் கொடுங்கள்'' என்று கேட்டான் காத்தான்.

மாய மன்னன் சங்கிலியாண்டி வெறுங் கையை நீட்டினான். அதில் 'டங்' என்று ஒரு படி தோன்றியது. அதைக் காத்தானிடம் கொடுக்க, அவன் அதைப் பெற்றுக் கொண்டு விடைபெற்றான். திரும்பி வரும் வழியில் அந்த ஆஜானுபாகுவான காவல்காரனைச் சந்தித்த காத்தான், ''நீ சொல்லிக் கொடுத்தபடி இதோ மாயப் படியை வாங்கி வந்திருக்கிறேன். இதனால் எனக்கு என்ன உபயோகம்?'' என்று கேட்டான்.

''இந்தப் படி மந்திர சக்தி உடையது. உனக்கு அரிசியோ, மாவோ வேறு எந்தத் தானியமானாலும் சரி, தேவைப்படும்போது எதிரே அந்தத் தானியக் குவியல் இருப்பதாக நினைத்துக்கொண்டு இந்தப் படியால் மொண்டு அளந்து கொட்டு. அப்போது அதிலிருந்து நீ விரும்பிய தானியம் வெள்ளமாகச் சொரியும். இந்தப் படியுள்ள இடத்தில் பஞ்சமே இருக்காது'' என்றான் அந்தக் காவலாளி.

காத்தானும் அந்த மாயப் படியைக் கமுக்கத்தில் இடுக்கிக் கொண்டு தன் வீட்டை நோக்கி நடையைக் கட்டினான். வெகுதூரப் பயணமாயிற்றே! நடு வழியில் இரவைக் கழிக்க ஒரு குடிசையை நாடிப் போனான்: அது ஒரு கிழவியினுடையது. காத்தான் கிழவியிடம் இரவு அவள் குடிசையில் தங்க அனுமதி கேட்டான். ''உறங்க இடம் தருகிறேன். ஆனால் உண்ண உணவு ஏதுமில்லை. இந்தப் பகுதியில் ஒரே பஞ்சம். நாங்களெல்லாம் பல நாட்கள் பட்டினி'' என்றாள் கிழவி.

''உணவைப் பற்றிக் கவலை வேண்டாம், பாட்டி. அடுப்பில் உலையை வை. நான் உனக்கு வேண்டிய அரிசி தருகிறேன்'' என்றான் காத்தான். பாட்டியும் காத்தான் சொற்படி அடுப்பை மூட்டி அதில் பானையில் தண்ணீரை வைத்துவிட்டு வந்தாள்.

காத்தான் தன் மாயப் படியை எடுத்தான். மண்டியிட்டு உட்கார்ந்துகொண்டான். அம்பாரமாகக் குவிந்திருக்கும் அரிசிக் குவியலிலிருந்து அளப்பதுபோல் அந்தப் படியில் அளக்கலானான் பாவனையாக. என்ன ஆச்சரியம்! வெறும் வெளியில் படியை முக்கியவன் நிமிர்த்தும்போதெல்லாம் அது நிறைய அரிசி. எவ்வளவு தடவை முக்கி முகந்து நிமிர்த்தினாலும் படி நிறைய அரிசி!

''போதுமா, பாட்டி, இன்னும் வேணுமா?'' என்று கேட்டான் காத்தான். வியப்பில் வாயடைத்துப் போய் நின்று கொண்டிருந்த கிழவியிடம், ''ஏன் இப்படித் திகைக்கிறாய்? இத்தனை அரிசியும் உனக்குத்தான். சப்பாத்தி சுட்டுத் தருகிறாயா? இதோ கோதுமை மாவு அளக்கிறேன்'' என்று கூறி, அரிசியைப் போல் கோதுமை மாவையும் படிப் படியாக அளந்து கொட்டினான்.

கிழவி காத்தானுக்கு அன்றிரவு பெரிய விருந்தே வைத்தாள். வயிறார உண்ட காத்தான் வழி நடந்த களைப்புத் தீரக் குறட்டை விட்டுத் தூங்கலானான். ஆனால் கிழவிக்குத் தூக்கம் வருமா? நள்ளிரவில் காத்தான் அருகில் இருந்த அந்த மாயப் படியை எடுத்து மறைத்துவிட்டு அதே போல் வேறு ஒரு சாதாரணப் படியை அவன் அருகில் வைத்த பிறகுதான் அவளுக்குத் தூக்கம் வந்தது.

காலையில் எழுந்த காத்தானுக்கு ஆசார உபசாரம் செய்து சிற்றுண்டி படைத்து வழிக்குக் கட்டுச் சோறு கட்டி அனுப்பி வைத்தாள் பாட்டி. காத்தான் உத்சாகமாகக் கிளம்பினான். தான் ஏமாற்றப்பட்டதை அவன் அறியவே இல்லை.

வீட்டுக்கு வந்த காத்தான், ''கறுப்பாயி! கறுப்பாயி! ஓடி வா. இனி நமக்குச் சாப்பாட்டுக்குக் கவலையே இல்லை. சங்கிலியாண்டிக் கோட்டையிலிருந்து என்ன கொண்டு வந்திருக்கிறேன், பார்'' என்று உத்ஸாகத்துடன் கூவினான். காத்தாயி ஓடி வந்தாள்,

முன்றலையில் கைகளைத் துடைத்துக் கொண்டே. காத்தான் மண்டியிட்டு உட்கார்ந்து நெல் அளக்க ஆரம்பித்தான். என்ன வரும்? ஒன்றுமில்லை. வேகமாகப் பாய்ந்து அளந்தான் வெறும் வெளியில். ஊஹூம்! பாவம் காத்தான்! படிக்குள் கூர்ந்து பார்த்தான். கறுப்பாயி களுக்கென்று சிரித்தாள். தன் புருஷனை எல்லாரும் 'அப்பாவி' என்று சொல்வதைக் கேட்டு அவளுக்கு வேதனையாக இருக்கும். 'இப்போது இது என்ன பைத்தியக்காரத்தனம்? கறுப்பாயியின் மௌனமும் பார்வையும் காத்தானைக் குத்திக் குதறின. அவனுக்கு அழுகையாக வந்தது.

''அந்தச் சங்கிலியாண்டி என்னை ஏமாற்றி விட்டார். இதோ இப்போதே அவரிடம் போய் இந்த மோசக்காரப் படியைக் கொடுத்துவிட்டு வருகிறேன்'' என்று கிளம்பினான் ரோசத்துடன்.

நடந்து நடந்து.... அதே காவல்காரன் முன்னால் போய் நின்றான் காத்தான். ''இந்தப் ப்டி ஒன்றும் எனக்கு வேண்டாம். ஒரே ஒரு தடவைதான் நீ சொன்னபடி இது விரும்பியதை அளந்தது. மறுபடியும் இதிலிருந்து ஏதும் வரவில்லை'' என்றான்.

காவல்காரன் காத்தானைப் பார்த்தான் பரிதாபமாக. அவனுக்குப் புரிந்து விட்டது, அப்பாவிக் காத்தான் படியைப் பறிகொடுத்து விட்டான் என்று.

''மறுபடியும் உன்னைக் கண்டால் சங்கிலியாண்டி ராஜாவுக்குக் கோபம் வரும். உன் தலையைத் துண்டாடச் சொன்னாலும் சொல்லுவார். ஒருவேளை உன் அதிர்ஷ்டம் அவருக்கு உன்னிடம் இரக்கம் ஏற்பட்டுப் படிக்குப் பதில் வேறு பொருள் தருவதாகச் சொன்னால் மந்திர மேஜை விரிப்பைக் கேள்'' என்று சொல்லி அனுப்பினான்.

காத்தான் சங்கிலியாண்டியின் முன்னால் போய் மண்டியிட்டுத் தான் மறுபடியும் வந்த காரணத்தைக் கூறினான்.

''ஓகோ! இந்தப் படிக்குப் பதிலாக உனக்கு வேறு என்ன வேண்டும்?'' என்று கேட்டார் அரசர் கோபத்துடன்.

''மேஜை விரிப்பைத் தாருங்கள்'' என்றான் காத்தான் நாக்குழற.

''இதோ மேஜை விரிப்பு. எடுத்துக் கொண்டு இங்கிருந்து உடனே போய்விடு'' என்று கர்ஜித்தார். மேஜை விரிப்பைச் சுருட்டிக் கொண்டு உடல் நடுங்க வெளியே ஓடி வந்த காத்தான், காவலாளியிடம் அந்த விரிப்பினால் ஏற்படும் உபயோகத்தைப் பற்றிக் கேட்டான்.

''எத்தனை பேருக்கு எந்தெந்த உணவுப் பண்டங்கள் தேவையோ, அதை நினைத்துக் கொண்டு மேஜையின் மீது இதை விரித்தால் போதும். நினைத்த உண்டிகள் அத்தனையும் இதன் மீது வந்து மண்டிவிடும்'' என்றான்.

காத்தான் மறுபடியும் அதே பாட்டியின் குடிசை அருகே வந்த போது இருட்டிவிட்டது. இரவு தங்க இடம் கேட்டான். பாட்டி தடபுடலாக வரவேற்றாள். ''படுக்க இடம் தருகிறேன். ஆனால் பசிக்குத்தான் உணவு ஏதும் இல்லை. வீட்டில் விறகே கிடையாது. அரிசி இருந்தாலும் ஆக்கிப் போட என் உடம்பில் தெம்பில்லை'' என்றாள்.

''நீ கவலைப்படாதே, பாட்டி! உனக்கு என்னென்ன பட்சணம், பணி



யாரம் வேண்டும், சொல். அத்தனையும் இதோ வரவழைக்கிறேன்'' என்று சொல்லி விரிப்பை விரித்தான். அவன் நினைத்துக் கொண்டது, கிழவி எண்ணிக் கொண்டது அத்தனையும் ஆவி பறக்க அந்த விரிப்பில் அடுக்கடுக்காகக் காட்சி அளித்தன. அவைகளின் மணம், அப்பப்பா! காத்தானோ, கிழவியோ அப்படிப்பட்ட சாப்பாட்டை இதுவரை கண்டதே இல்லை. வயிறு புடைக்கச் சாப்பிட்டார்கள். காத்தான் கவலை இல்லாமல் தூங்கினான். வழக்கப்படி கிழவி தன் சூழ்ச்சியைச் செய்தாள். மந்திர விரிப்பு மறைந்தது. சாதாரண விரிப்பு காத்தான் அருகே வந்தது.

காலையில் எழுந்த காத்தான் நடந்தது அறியாது வீடு திரும்பினான். மனைவி

லவங்கம்



ஏலக்காயுடன் அநேகமாகப் பயன்படுத்தக்கூடிய லவங்கம், மொலுக்கஸ், ஜான்சிபார், ஜாவா, சுமத்திரா ஆகிய தீவுகளில் நிறையப் பயிராகிறது. நாட்டு மருந்து முதலானவைகளுக்குப் பயன்படும் லவங்கத்துக்கு 'கிராம்பு' என்ற பெயரும் உண்டு.

லவங்கம் ஏதோ ஒரு செடியிலோ, மரத்திலோ உண்டாகும் காய்கள், வெடித்துச் சிதறும் விதைகள் என்று பலரும் நினைக்கக்கூடும். ஆனால் அது தவறு. லவங்க மரத்தின் மொட்டு விரியாத பூக்கள்தான் லவங்கமாகும். இந்த விஷயத்தைக் கேட்டால், வயது முதிர்ந்த சிலரும்கூட வியப்படைவர். ஆனால் இது முற்றிலும் உண்மையே. லவங்க மரப் பூக்கள் நன்கு விரிவதற்கு முன்பே அதைப் பறித்து வெயிலில் உலர்த்தி விடுகிறார்கள். இவையே பின்னர் கிராம்பாக வெளியே விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.

— ஆர். சம்பத்குமாரன்

யிடம் அவன் பெருமையுடன் என்ன சொல்லி இருப்பான், என்ன நடந்திருக்கும், அவன் மனைவி அவனை எப்படி ஏசி இருப்பாள் என்பதையெல்லாம் சொல்லவா வேண்டும்? பாவம், காத்தான்!

''கறுப்பாயி, யாரோ என்னை முட்டாளாக்குகிறார்கள். ஆனால் நீகூட என் வார்த்தையை நம்பாததைத்தான் என்னால் தாங்க முடியவில்லை. நான் மறுபடியும் சங்கிலியாண்டிக் கோட்டைக்குப் போய் வருகிறேன்'' என்று கிளம்பி விட்டான்.

கறுப்பாயியின் முன்னிலையில் ரோசத்துடன் கிளம்பினாலும் காத்தானுக்குக் கால்கள் துவண்டன. மனத்தில் அச்சம் ஏற்பட்டது. தயங்கித் தயங்கி எப்படியோ கோட்டைக்கு முன் வந்துவிட்டான். இவனைக் கண்டதுமே காவலாளி, ''என்னப்பா, பொழுது விடிஞ்சால் உன் போராட்டமே பெரிசாப் போச்சு. இன்னிக்கு என்ன?'' என்றான். காத்தான் மேஜையின் விரிப்பு வெறும் துணி என்பதைச் சொன்ன போது, ''உனக்கு முடிவு காலந்தான் வந்துவிட்டது. ராஜா உன் குற்றச்சாட்டைக் கேட்டால் என்ன நடக்குமோ எனக்குத் தெரியாது. ஒரு வேளை அவர் மறுபடியும் மனமிரங்கினால் மந்திரப் பையைக் கேட்டு வாங்கிக் கொள்'' என்று உள்ளே அனுப்பினான் காவல்காரன்.

காத்தானைக் கண்டதுமே சங்கிலியாண்டியின் கண்களில் தீப்பொறி பறந்தது. ''மறுபடியும் எங்கே வந்தாய், இங்கே?'' என்றார்.

காத்தான் நெடுஞ்சாண்கிடையாகத் தரையில் விழுந்தான். ''நான் உங்களைச் சந்திக்கவேயில்லை என்கிறாள் என் மனைவி கறுப்பாயி. அவள் மகிழ்ச்சிக்காகத்தான் நான் இப்படி அலைகிறேன். என்னைப் பித்துக்குளி என்று அவள் நினைக்காமல் செய்வது உங்கள் கையில்தான் இருக்கிறது.....'' என்றான் காத்தான், கீழிருந்து எழுந்திருக்காமலேயே.

சங்கிலியாண்டி கடகடவென்று சிரித்தார். மனைவியிடம் நல்ல பெயர் வாங்கப் பாடுபடும் மனிதனைக் கண்ட அவருக்குப் பச்சாத்தாபம் ஏற்பட்டது. ''அசட்டு மனிதனே! எழுந்திரு! இது தான் கடைசி முறை. மறுபடியும் இங்கு வந்தால் நீ திரும்பிப் போகமாட்டாய்'' என்றார். காத்தான் மந்திரப் பையுடன் வெளியில் வந்தான். காத்தான் கேட்காமலேயே காவல்காரன் அந்தப் பையின் மகிமையைக் கூறினான். ஏனென்றால் அவன் இந்த முறையில் உயிரோடு, பரிசுப் பொருளோடு வெளியே வந்ததில் அவனுக்கு வியப்பான வியப்பு! ''முட்டாளே, இந்தப் பைதான் சங்கிலியாண்டி மன்னரின் மகத்தான பொருள். ஆபத்துக் காலத்தில் உதவி தேவைப்படும் போது இந்தப் பையைத் திறந்து, ''வாருங்கள் வெளியே, தாவிக் குதித்து வாருங்கள்'' என்று கூப்பிடு. இந்தப் பையிலிருந்து போர் வீரர்கள் சாரி சாரியாகப் புறப்பட்டு நீ விரும்பும் பணியைச் செய்வார்கள். ஆனால் ஒன்று. அவர்களுக்கு வேலை தரமுடியாவிட்டால் உன்னையே அவர்கள் அடித்து நொறுக்கி விடுவார்கள். ஆகவே எச்சரிக்கையாக இரு. போய் வா'' என்று கூறி அனுப்பினான்.

காத்தானின் உள்ளம் மகிழ்ச்சியால் கனத்துக் கிடந்தது. வழக்கமாகப் பாட்டியின் குடிசைக்கு வந்தான். இரவு படுக்க இடமும் உண்ண உணவும் கேட்டான். பாட்டி பலே பாட்டி! முன் தடவைகளில் கைப் பற்றிய பொருள்களை ஒளித்து வைத்துவிட்டு, அவன் பசிக்குப் பரிமாறத் தன்னிடம் ஏதுமில்லை என்று கையை விரித்தாள். அப்பாவிக் காத்தானும், ''கவலைப்படாதே, பாட்டி! இதோ பார்!'' என்று மந்திரப் பையைத் திறந்து, ''வாருங்கள் வெளியே தாவிக் குதித்து வாருங்கள்''

என்று அழைத்தான். இரண்டு வீரர்கள் குபீரென்று பையிலிருந்து எழும்பிக் குதித்து வந்து நின்றார்கள். ''எனக்கு நல்ல பசி. என் பசி தீர உணவு கொண்டு வாருங்கள்'' என்று கட்டளையிட்டான். காற்றில் கரைந்து மறைந்த அவ்விருவரும் சில விநாடிகளில் திரும்பத் தோன்றினார்கள். இருவருடைய கைகளிலும் கமகமவென்று மணம் கமழும் ஆவிப் பறக்கும் உணவுப் பண்டங்கள் இருந்தன. காத்தானை உட்கார வைத்து இருவரும் பரிமாறினார்கள். ராஜ விருந்து உண்டு முடிந்தானதும், —''வீரர்களே! இனி நீங்கள் உங்கள் இருப்பிடத்துக்குப் போகலாம்'' என்று உத்தரவிட்டான். பைக்குள் புகுந்து மறைந்தார்கள் வீரர்கள்.

பாட்டி இத்தனையையும் திறந்த வாய் மூடாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். காத்தான் சொகுசாகத் தூங்கிப் போனான். ஆனால் நள்ளிரவில் கூச்சலும் அழுகையும் சத்தமும் கேட்டுக் கண் விழித்தான். வழக்கப்படி மந்திரப் பையைத் திருட முனைந்தாள் பாட்டி. ஆனால் காத்தான் எத்தனை நாளைக்குத் தான் அப்பாவியாக இருப்பான். அவன் கண்ணயருமுன் பையிலிருந்து வீரர்களை வரவழைத்துத் தனக்குக் காவல் இருக்கும்படி கட்டளை இட்டுவிட்டுத்தான் கண்ணயர்ந்திருந்தான். இது பாட்டிக்குத் தெரியாது. திருட வந்த அவளை வீரர்கள் இருவரும் நையப் புடைக்கலானார்கள்.

''ஐயோ, ஐயோ! என்னை அடிக்காதே! நான் மந்திரப் பையைக் கொடுத்து விடுகிறேன். மேஜை விரிப்பும் எனக்கு வேண்டாம். உங்கள் எஜமானரிடமிருந்து அவைகளை அபகரித்தது நான்தான். ஐயோ, போதும், அடிக்காதே.... நிறுத்து....'' என்று ஓலமிட்டாள் கிழவி. இப்போதுதான் காத்தானுக்கு உண்மை புரிந்தது.

சங்கிலியாண்டி தன்னை ஏமாற்றவில்லை. இந்தக் கிழவியின் திருட்டுப் புத்திதான் தன்னைக் கறுப்பாயியின் முன்னால் முட்டாளாக்கியிருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டவன் காவல் வீரர்களைப் பைக்குள் போகச் சொல்லி விட்டுக் கிழவியிடமிருந்து மந்திரப் படியையும் மேஜை விரிப்பையும் பிடுங்கிக் கொண்டு இரவோடு இரவாகக் கிளம்பி விட்டான் வீட்டுக்கு.

பலபலவென்று விடியும்போது வீட்டு வாசற்படியில் வந்து நின்றான் காத்தான். வாசலுக்குத் தண்ணீர் தெளிக்கக் கறுப்பாயியும் கதவைத் திறந்து கொண்டு வந்தாள். ''வந்துட்டியா? இன்னிக்கு என்ன பித்துக்குளித்தனம்



'கார்க்' மரம்

கண்ணாடிப் புட்டிகளின் வாய்ப்புறத்தில் அடைத்து மூடப் பயன்படும் கார்க் (அடைப்பான்) எப்படிக் கிடைக்கிறது என்பது தெரியுமா உங்களுக்கு?

'கார்க் மரம்' என்னும் ஒரு வகை மரத்தின் பட்டைகளை உரித்துத்தான் பல அளவுகள் உள்ள 'கார்க்'குகள் தயாரிக்கப்படுகின்றன. பிரான்ஸ், இதாலி, ஸ்பெயின் கார்ஸிகா ஆகிய நாடுகளில் இவ்வகை மரங்கள் நிறைய வளர்கின்றன. இந்த மரங்கள் கிட்டத்தட்ட நாற்பது அடி உயரம் வரை வளரக் கூடியவை. பத்துப் பதினொரு ஆண்டுகளுக்கு ஒரு முறை இவ்வகை மரங்களின் பட்டைகளை உரித்து எடுக்கிறார்கள். இந்தப் பட்டைகளையே பல ரகங்களில் அறுத்து, வேண்டிய அளவுள்ள 'கார்க்' (அடைப்பான்)களாகத் தயாரிக்கின்றனர். இந்த கார்க் மரங்கள் சுமார் நூற்றைம்பது வருடங்கள் வரை உயிர்வாழக் கூடியவையாகும்.

- ஆர். சம்பத்குமரன்

செய்து காட்டப் போறே?'' என்று ஏளனமாக மூக்கைத் தூக்கினாள்.

'' பித்துக்குளித்தனமா? இதோ, பார்!'' என்று படியைக் கவிழ்த்தான். அருவி போல் அரிசி கொட்டியது. மேஜை விரிப்பை அகலப்படுத்தினான். அதன் மீது மளமளவென்று.... அப்பப்பா! எத்தனைவிதமான பலகாரங்கள், பணியாரங்கள். கறுப்பாயிக்கு மூச்சு முட்டியது. பையைத் திறந்தவன், ''வாருங்கள், வெளியே! ராணியை உபசரிப்பது போல் என் மனைவிக்கு உணவு பரிமாறி உபசரியுங்கள்'' என்று கூறினான்.

கட்டுமஸ்தான வீரர்கள் இருவர் தாவிவந்து நின்றார்கள். கறுப்பாயினால் பேசவே முடியவில்லை. தன் கணவனைக் கட்டிக்கொண்டாள். அவன் கால்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். கால்களில் விழுந்து வணங்கி எழுந்தவள் விம்மி விம்மி அழுதாள், ஆனந்தமிகுதியினால். அவளுக்குப் பேச முடிந்தபோது, ''என் மகிழ்ச்சிக்காக என் ராசா என்ன பாடுபட்டு இதையெல்லாம் கொண்டு வந்தீங்க?'' என்று வாஞ்சையோடு அவன் முகத்தை வருடினாள்.



சூரியக் குஞ்சு

உலகம் தோன்றியபோது நாடு நகரங்கள் கிடையாது. கூட்டம் கூட்டமாக இத்தனை மனிதர்களும் கிடையாது. எங்கும் காடுதான் மண்டிக் கிடந்தது. மிருகங்களும் பறவைகளுமே அந்தக் கானகத்தில் ஆட்சி புரிந்துவந்தன. ஆங்காங்கே ஒரு சில மனிதர்கள் வசித்து வந்தார்கள். அவர்களும் நாகரிகமில்லாத காட்டுமிராண்டிகள்; கற்கால மனிதர்கள். அப்போது யாருக்குமே நெருப்பைப் பற்றித் தெரியாது. சூரியனால் சூடேறிய பாறை மீது உணவைக் காய வைத்துத்தான் உண்டு வந்தார்கள்.

இப்படிப்பட்ட காலத்திலே ஒரு கொக்கும் எலியும் நண்பர்களாக இருந்தன. இந்த எலி ஒரு விசேஷமான எலி. இதற்குக் கங்காருவைப் போல் வயிற்றில் ஒரு பை உண்டு. இம்மாதிரி பையுள்ள மிருகங்கள் இப்போது ஆஸ்திரேலியாவில் மட்டும்தான் வாழுகின்றன. ஆனால் அப்போது உலகம் எங்கிலுமே இம்மாதிரிப் பையுள்ள எலிகள் வசித்தன. கொக்கும் எலியும் ரொம்ப ரொம்பச் சிநேகம். எப்போதும் இவை இரண்டும் சேர்ந்தே காணப்படும். சாப்பிடுவது படுப்பது எல்லாம் ஒன்றாகத்தான்.

ஒரு நாள் கொக்கு மீனைச் சுவைத்துக் கொண்டிருந்தது. எலி இரு மரக் குச்சிகளை வைத்துக்கொண்டு ஒன்றோடு ஒன்று தட்டி விளையாடிக் கொண்டிருந்தது.

இந்தச் செய்கையின்போது திடீரென்று அந்தக் குச்சிகளில் ஓர் ஒளிக்கதிர் சுடர்விட்டது, மின்னலைப்போல். பயந்து போன எலி குச்சியைக் கீழே போட்டுவிட்டு ஒதுங்கி ஓடியது. தீப்பிடித்து எரிந்த குச்சிகள் கீழே கிடந்த காய்ந்த புல்லுக்குத் தீ மூட்டியது. எலியும் கொக்கும் அதுவரை நெருப்பைப் பார்த்ததில்லையாதலால் பயந்து போய் அதையே பார்த்துக் கொண்டிருந்தன. காய்ந்த புற்களில் பற்றிய நெருப்பு, கீழே இருந்த மீனை வேகவைத்துப் பக்குவப் படுத்தியபோது அதன் மணம் இனிமையாக இருந்தது. நெருப்பு அணைந்ததும் இரண்டும் நெருப்பினால் பக்குவமான மீன் இறைச்சியைச் சுவைத்துப் பார்த்தன. அதன் ருசி ரொம்ப நன்றாக இருந்தது. வெய்யிலில்காய வைத்து உலர்த்தி உண்பதைவிட, இந்த ஒளிச் சுடர் உணவை மிக்க ருசியுள்ளதாக்கி யிருப்பதை அறிந்த எலியும் கொக்கும் மகிழ்ந்து போயின. இப்படி உணவைப் பக்குவம் செய்து உண்ணும் பழக்கத்தைத் தாங்கள் மட்டும் இரகசியமாக வைத்துக் கொள்ளுவது என்றும் முடிவு செய்தன. எலி அந்தக் குச்சிகளைத் தன் தோல் பையில் பத்திரமாக வைத்துக் காப்பாற்ற வேண்டும் என்று ஏற்பாடாயிற்று. அந்தக் குச்சிகளை ஒன்றோடொன்று வேகமாகத் தேய்த்துத் தட்டினால் பொரி பறந்தது. அதற்குச் சூரியக் குஞ்சு என்று பெயரிட்டன, கொக்கும் எலியும்.

சூரியக் குஞ்சின் உதவியால் தங்கள் உணவை இவ்விரண்டும் இரகசியமாகப் பக்குவம் செய்து உண்டு வந்தன. ஆனால் அதன் மணம் காடு முழுதும் பரவி மற்றப் பறவை மிருகங்களின் கவனத்தைக் கவர்ந்துவிட்டது. அது மட்டுமல்ல; மனித இனத்துக்கும் இது மர்மமாக இருந்தது. 'ஏது அந்த மணம், எப்படி வருகிறது, எங்கிருந்து வருகிறது?' என்பதை அறிய ஒவ்வொன்றும் தீவிர முயற்சி செய்தது. முடிவில் ஒரு கிளியும் ஆந்தையும் கொக்கு எலித் தோழர்களிடம் சந்தேகம் கொண்டு அவைகளைக் கண்காணிக்கலாயின. அவ்விரண்டும் போகுமிடமெல்லாம் இவ்விரண்டும் மரத்துக்கு மரம் தாவிப் பறந்தபடி பின்தொடர்ந்தன. எலி தன் அடிவயிற்றிலுள்ள தோல் பையிலிருந்து சிக்கிமுக்கிக் குச்சிகளை எடுத்துத் தட்டித் தேய்த்து நெருப்புப் பொரி உண்டாக்கித் தீ மூட்டி உணவைப் பக்குவம்

செய்வதையும் அப்போது ஏற்படும் மணம்தான் அது என்பதையும் கிளியும் ஆந்தையும் கண்டு கொண்டன. உண்மையைக் கண்டு கொண்ட இரண்டுக்கும் வியப்பான வியப்பு.

உடனே ஓடிப் போய்த் தாங்கள் கண்டவற்றைத் தன் கானகத்துத் தோழர்களுக்கு அறிவித்தன. அவை இதை மனிதனிடம் கூறி அவன் உதவியை நாடுவதுதான் சரி என்று முடிவெடுத்தன. ஆதி மனிதன் விலங்கு பறவைகளோடுசேர்ந்துதானே வாழ்ந்து வந்தான். மணம் மிக்க உணவு தயாரிக்கும் புதிய முறையை அறிந்துகொள்ள மனிதனுக்கும் ஆசை உண்டாயிற்று. ஆனால் கொக்கும் எலியும் இதை ரகசியமாக வைத்திருப்பதால் அவைகளிடமிருந்து இதைத் தந்திரத்தினால்தான் பெற வேண்டும் என்று முடிவு செய்தான் மனிதன். அந்தக் காலத்திலேயே இப்படிக் குறுக்குவழிகளில் அவன் மூளை செயல்பட ஆரம்பித்துவிட்டது.



மனிதன் ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்தான். அதற்கு எலியையும் கொக்கையும் அழைத்தான். விருந்துக்குப் பின் பாட்டும் ஆட்டமும் அமர்க்களமாக இருந்தன. ஜோடி ஜோடியாக மிருகங்களும் பறவைகளும் நாட்டியமாடின. கொக்குக்கும் அப்படி ஆட வேண்டும் போல் இருந்தது. தன் தோழன் எலியுடன். அது தன் விருப்பத்தை எலியிடம் சொன்னபோது, ''ஊஹூம், வேண்டாம். நாம் நாட்டியமாடினால் சூரியக் குஞ்சு தயாரிக்கும் குச்சிகள் கீழே விழுந்து நம் இரகசியம் வெளிப்பட்டுவிடும்'' என்றது.

ஆனால் கொக்குக்கு நாட்டிய ஆசை அடக்க முடியாததாக இருந்தது. ''உன் தோல் பையை ஓர் இடத்தில் மறைவாக ஒளித்து வைத்துவிட்டு வா. நம்முடைய நடனத் திறமையை இவர்களுக்குக் காண்பிக்க வேண்டாமா ?'' என்று வற்புறுத்தியது. எலியும் வேறு வழியின்றித் தன் தோல் பையை ஓர் ஓரத்தில் சுற்றி வைத்துவிட்டுக் கொக்குடன் நடனமாடத் தயாராகியது. இதற்காகத்தானே விருந்தே ஏற்படுத்தியிருந்தான் மனிதன். உடனே கழுகுக்குக் கண் ஜாடை காட்டினான். அவ்வளவு தான். கழுகு, எலியின் தோல் பையிலிருந்து சிக்கி முக்கிக் குச்சிகளைத் தன் அலகில் கௌவிக் கொண்டு பறந்தது. அப்படிப் பறக்கும் போது குச்சிகள் உரசித் தீப் பிடித்துக் கொண்டன. ''திருடன்! திருடன்! ஏய், அதைக் கொடுத்துவிடு'' என்று எலி ஓட, கொக்கும் அதைத் துரத்த...ம்ஹூம்...! கழுகைப் பிடிக்கவா முடியும்? எலியையும் கொக்கையும் மனிதன் பின் தொடர்ந்து ஓடினான். ஆனால் கழுகோ புதருக்குப் புதர், புல்வெளிக்குப் புல்வெளி அந்தச் சூரியக் குஞ்சை வைத்துக் கொண்டே போயிற்று. என்ன ஆகியிருக்கும்? காடு முழுதும் தீ பரவி, 'ஜிகு ஜிகு' என்று கொழுந்துவிட்டு எரியலாயிற்று. இப்போது அந்த இரகசியம் அம்பலமாகி எல்லாருக்கும் நெருப்பின் அருமை தெரிந்துவிட்டது. இப்படித்தான் மனிதன் நெருப்பைத் தெரிந்து கொண்டான். எப்படி இந்தக் கதை? ஆஸ்திரேலியாவின் ஆதிவாசிகளிடையே இந்த அழகான கதை வழக்கில் இருக்கிறது.

— **விகேயெம்**



கோகுலமே!

மணவை.ப.கீரன்

கண்ணன் போல வேய்ங்குழலின்
கன்னல் இசையை வழங்கிடுவேன்!
வெண்ணெய் தின்று விளையாடி
வீரன் ஆக வளர்ந்திடுவேன்!

கன்றும் மாடும் துள்ளுதல்போல்
களித்துத் துள்ளிச் செல்வேனே!
என்றும் கவலை இல்லாமல்
இன்பக் கதைகள் சொல்வேனே!

பெண்கள் கூட்டம் என்றாலும்
பேசத் தயங்கி மயங்காமல்
எண்ணம் எடுத்துச் சொல்லிடுவேன்;
எதிலும் முந்தி வந்திடுவேன்!

கண்ணன் வாழ்ந்த கோகுலமே
களிப்பும் வாழ்ந்த இடமன்றோ?
மண்ணில் சிறுவர் மகிழ்வோங்க
மலரச் செய்வோம் கோகுலமே!

சுண்டெலிக் கல்யாணம்

சுப்ர.பாலன்



சின்ன மூஞ்சிச் சுண்டெலிக்கு
நாளைக் கல்யாணம்
சீடை முறுக்குத் தேன்குழலும்
ரொம்பத் தாராளம்!

அன்ன நடை கெட்டதென
ஆமை யக்காதான்
ஆட்டமாடி மகிழவைப்பாள்
வந்து பாருங்கோ!

கோணல்மூஞ்சிக் கழுதையக்கா
பாட்டுப் பாடுவாள்!
கொட்டுமேளம் தவளையண்ணன்
பார்த்துக் கொள்ளுவார்!

காணக்கூகும், காந்தலேட்டு
ஆந்தை பொறுப்பிலே!
கடைச்சாமான் ஜவுளியெல்லாம்
காசில்லாமலே!

சின்னமூஞ்சிச் சுண்டெலிக்கு
நாளைக் கல்யாணம்!
சினிமிட்டாய் திருடிவந்து
விருந்து உண்ணுங்கோ!

கண்டு குண்டு சீமாத் தாத்தா



ஆரா



"டேய் கண்டு குண்டு, உங்க பிராக்கிரஸ் ரிப்போர்ட்டைப் பார்த்தீர்களா? எல்லாப் பாடங்களிலும் எவ்வளவு மோசமாக மார்க் வாங்கி இருக்கீங்க? உங்கள் தாத்தாவிடம் காட்டிக் கையெழுத்து வாங்கி வாருங்கள்'' என்றார் தலைமை ஆசிரியர்.

கண்டுவும் குண்டுவும் தலையில் கைவைத்தபடி அருகில் உள்ள பார்க்கில் போய் உட்கார்ந்தார்கள். 'டேய், நம்ம மார்க்குகளைத் தாத்தா பார்த்தார்னு பிச்சுடுவாரே! என்னடா பண்ணறது?'' என்றான் குண்டு. கண்டுவுக்கும் ஒரு வழியும் புலப்படவில்லை.

அன்றிரவு கண்டுவும் குண்டுவும் தூங்கவே இல்லை. தாத்தாவிடம் எப்படியேனும் கையெழுத்து வாங்கிவிடுவது என்று திட்டம் போட்டார்கள். காலை ஒன்பதரை மணிக்குள் காரியம் முடிந்தாக வேண்டும். மணி டாண்டாண் என்று ஒன்பது அடித்தது. நாடகம் ஆரம்பமாயிற்று. ''டேய்! கண்டு, என் மூக்குக் கண்ணாடி எங்கேடா? ரொம்ப நாழியாத் தேடிண்டிருக்கேன்'' என்று முடிப்பதற்குள், ''தாத்தா! எங்கள் பிராக்ரஸ் ரிப்போர்ட் கார்டு வந்துவிட்டது. இரண்டு பேரும் சுமாரா நன்னாத்தான் வாங்கியிருக்கோம்.. நீங்கள் கையெழுத்தைப் போட்டுவிடுங்கள். இதோ, பேனா!'' என்றான் கண்டு. ''மூக்குக் கண்ணாடி இல்லாமல் எப்படிடா கையெழுத்துப் போடுவது?'' என்றார் சீமாத் தாத்தா.

''நாங்கள் இதோ தேடி வருகிறோம்'' என்று நகர்ந்தான் கண்டு. சற்றைக்கெல்லாம் ''இதோ; மூக்குக் கண்ணாடி'' என்று சொல்லிக் கொண்டே மாடிப் படியில் 'டமால்' என்று உருண்டான்.

''ஐயையோ!'' என்று தாத்தா ஓடோடியும் போய் அவனைத் தூக்கினார். தட்டுத் தடுமாறி எழுந்த கண்டு, ''மூக்குக் கண்ணாடி உடைந்துவிட்டதா, தாத்தா?'' என்றான்.

'தான் கீழே விழுந்ததுமல்லாமல் இந்தப் பயல் மூக்குக் கண்ணாடியைப் பற்றிக் கவலைப்படுகிறானே?' என்று தாத்தா பெருமைப்பட்டார்.

''ஒழியட்டும். பிராக்ரஸ் ரிப்போர்ட்டைப் பார்க்கிறேன்'' என்று மூக்குக் கண்ணாடியை மாட்டிக் கொள்ளப்போனார். கதவை யாரோ பெயர்த்தெடுப்பது போல் சத்தம். யாரது என்று தாத்தா கதவைத் திறந்தார். ஒரு பெரிய காளை மாடு சீறிக் கொண்டு உள்ளே வந்தது.



''இது யார் வேலை? மாட்டை வீட்டுக்குள்ளே விரட்டியடிப்பது?'' என்று தாத்தா ஓட ஆரம்பித்தார். கண்டுவும் குண்டுவும் மெள்ள மாட்டுக்குப் பாய்ச்சல் காட்டி வாழை இலை கொடுத்து மடக்கினார்கள். அது வரையிலும் தாத்தா, பயத்தில் மேஜைமேல் ஏறி நின்றிருந்தார்.

மணி ஒன்பதே கால். மாட்டைவெளியே விரட்டுவதற்கும் அதே வேளையில் தலைமை ஆசிரியர் உள்ளே வருவதற்கும் சரியாக இருந்தது.

உள்ளே நுழைந்தவரை மாடு பார்த்தது. அவருடைய கறுப்புக் கோட்டைக் கண்டு மிரண்டபடி மறுபடியும் உள்ளே ஓடி வரத் தொடங்கியது. தலைமை ஆசிரியர் வாசல் பக்கம் ஓடினார். மாடு அவரைத் துரத்த ஆரம்பித்தது.




''ஐயையோ! தாத்தா மணி ஒன்பதரை. பள்ளிக்கு நாழியாச்சு!'' என்று கண்டுவும் குண்டுவும் அடம் பிடித்தார்கள். ''பிராக்ரஸ் ரிப்போர்ட்டில் கையெழுத்துப் போடுங்கள். சீக்கிரம் போட்டுக் கொடுங்கள்'' என்றார்கள் கண்டுவும் குண்டுவும். மறுபடியும் வாசல் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. ''சார்! போஸ்ட்! மணியார்டர்!'' என்றார் தபால்காரர்.

''பேஷ்! உங்க பிராக்ரஸ் ரிப்போர்ட்டில் கையெழுத்துப் போடப்போகும் நேரம் நல்ல நேரம்டா. 'மணி ஆர்டர்'னு வர்றது!'' என்று அவசரமாக அதில் கையெழுத்துப் போட்டுவிட்டார். கண்டுவும் குண்டுவும் கும்மாளம் போட்டபடி பள்ளிக்கு ஓடினார்கள்.




ஒளிமயக் காதலி!
3
கதை: வாண்டுமாமா
சித்திரம்: ரமணி...
மாடசாமியிடமிருந்து விமானத்தில் அனுப்பப்பட்ட டைகர் சில மணி நேரத்தில் பம்பாய் வந்து இறங்கியது. அதை எதிர் பார்த்துக் காத்திருந்தார் கங்காராம்...
டைகர், டைகர்! உன் வருகைக்குத்தான் என்ன சக்தி! நீ வரப் போவதாக— ஷீலாவிடம் சொன்னதும் எப்படி மகிழ்ந்து போனாள் தெரியுமா?
கங்காராம் டைகருடன் நேரே ஷீலா இருந்த நர்ஸிங் — ஹோமுக்கு விரைகிறார்...
இனி ஷீலா குணமடைந்து விடுவாள். அவளுக்கு வியாதி ஏதுமில்லை. நீ கிடைக்காத ஏக்கத்தில் தான் அப்படிச் துவண்டு போய் விட்டாள்.
ஷீலாக் கண்ணு! இதோ பார், உன் அருமை டைகர். உன்னைக் காண உன்னோடு வாழ, உன்னுடைய வருகையை இருக்க விமானத்தில் பறந்து ஓடி வந்திருக்கிறது..
டைகரின் வரவு பத்திரிகைகளுக்குச் செய்தி விருந்தாயிற்று. சோதாக்களுக்கோ அதுவே செல்வம் குவிக்க வழி வகுத்தது....
தொழிலதிபர் தங்காராமின் உயிர் காக்கப் பறந்து வந்த நாய்.
அதன் வருகை...
டைகர்
ஷீலாவிற்கு அதனிடம் உயிர்.
அண்ணே, எனக்கு ஒரு ஐடியா தோணுது. கங்காராம் சேட்ஜிக்கு ஷீலா ஒரே பொண்ணு. அவளுக்காக அவர் எதையும் செய்யக் கூடியவர்.
புரியுது. அந்தப் பெண்ணைக் கொண்டு நாம் பணம் பண்ணனும். அதானே? தெருட்டாப் போச்சு. மீனான் போம்.


அப்பா பழக் கூடையை உன்னிடம் கொடுத்தனுப்பினரா, டைகர்?
சத்தம் போடாதே. கூச்சலிட்டாயோ இது என்ன தெரியுமா? துப்பாக்கி. ஜாக்கிரதை அசையாதே...
கிக் கொள்ளவே டைகர் அவன் மீது பாய்கிறது...
அண்ணே! தயங்காதே. அந்த நாயை அடித்துப் போடு. இல்லாவிடில் நம் காரியம் கெட்டு விடும்.
இவர்கள் இருவரும் டைகரை அடித்துப் போட்டு விட்டு ஷீலாவைக் கடத்திக் கொண்டு காரில் பறந்து விடுகின்றனர்...
உங்கள் நாய் ஜன்னலைப் பார்த்துக் குரைப்பதால் யாரோ அதன் வழியாக வந்து குழந்தையைத் தூக்கிப் போயிருக்க வேண்டும்...
டைகர், ஷீலா எங்கே? ஏன் இந்த அறை இப்படி அலங்கோலமாகக் கிடக்கிறது?
ஐயோ, என் அருமை மகள் ஷீலாவைக் காணோம். யார் கடத்திக் கொண்டு போயிருப்பார்கள்? ஷ்ரீராம்.. எனக்கு மயக்கமாக வருகிறது.
தொடரும்...

புராணக் கதை

சதமன்யு

—தோதோ—



சத்திய யுக காலத்தில் பாரத நாடு பயங்கரப் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டது. நாடு செழிக்க அவசியமான மழை பெய்யாததன் காரணமாகத் தானியங்கள் கொஞ்சம்கூட விளையவில்லை. நதி, குளம், கிணறு முதலிய எல்லா நீர் நிலைகளும் வற்றிப் போயின. பசியின் கொடுமை தாங்காமல் ஆயிரக்கணக்கான மக்கள் நாளடைவில் இறந்து போயினர். நாடு முழுதும் பன்னிரண்டு வருடங்கள் இந்தப் பயங்கரப் பஞ்சம் நீடித்தது.

ஒரு நாள் முனிவர்கள், அரசர்கள் முதலியோர் ஒரு மண்டபத்தில் கூடினர். தேசத்தில் நிலவிய பஞ்சத்தைப் போக்க என்ன வழி என்று யோசிக்கலாயினர்.

முனிவர்களில் ஒருவர் நரபலி கொடுப்பதன் மூலம் தேவர்களின் அரசனை இந்திரனை சந்தோஷப்படுத்தினால் மழை பெய்யும் என்று சொன்னார்.

சபையோருக்கு அந்த உபாயம் பிடித்திருந்தது. ஆனால் தேசத்துக்காகத் தன்னுடைய உயிரை யார் 'அர்ப்பணம்' செய்வார்கள் ? ஒருவரும் முன்வரவில்லை. மானிடராய்ப் பிறப்பது அரிதாயிற்றே ! சபையில் அமைதி நிலவியது. திடீரென்று கூட்டத்தின் ஒரு புறத்திலிருந்து ஒரு குரல் வெளிப்பட்டது.

''மஹாநுபாவர்களே ! கணக்கற்ற மக்களைச் சாவின் கைப் பிடியிலிருந்து காப்பாற்றுவதற்காகவும் இந்தப் பாரத தேசத்தைப் பிடித்துள்ள பயங்கர நிலைமையை அகற்றுவதற்காகவும் நான் என்னுடைய உயிரை அர்ப்பணிக்கிறேன். உயிர் தேசத்துக்குத்தான். தேசத்தின் நன்மையில் பங்குகொள்ளாத உயிரின் பயன் என்ன?''


குரல் வந்த திசையில் எல்லோரும் தலையைத் திருப்பினர். உடன் திடுக்கிட்டனர். காரணம்? அங்கு ஒரு சிறுவனைப் பார்த்ததால்தான். அவன் பெயர் சதமன்யு. அந்தச் சிறுவனுக்குப் பன்னிரண்டு வயதுதான் இருக்கும்.

எல்லோரும் மிகுந்த ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர்.

சதமன்யுவின் தாயும் தந்தையும் அதே கூட்டத்தில் இருந்தனர். தந்தை, சதமன்யுவிடம், ''குழந்தாய்! நீ மிகவும் மெச்சத் தகுந்தவன். உனது தேசபக்தியைக் கண்டு மிகவும் பெருமைப் படுகிறேன்'' என்று சொன்னார். தமது அருமைப் புதல்வனை மார்புடன் அணைத்து ஆலிங்கனம் செய்து கொண்டார்.


நரபலி கொடுப்பதற்காக யாகம் தொடங்கியது. சதமன்யு, உயிரை அர்ப்பணிக்க மண்டபத்தினுள் நுழைந்தான். தலை நிமிர்ந்து நடந்து வந்தான். துக்கம் கொஞ்சம்கூட அவன் முகத்தில் இல்லை.

கண் கொட்டாமல் சதமன்யுவை மக்கள் பார்த்தனர். அவன் தேவர்களின் தலைவனை, மனத்தினுள் ஸ்தோத்திரம் செய்து கொண்டிருந்தான். யாகம்



உச்ச கட்டத்தை அடைந்தது. சிரித்த முகத்துடன் சதமன்யு பலி பீடத்திடம் சென்றான். அவன் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது. தன்னுடைய மரணத்துக்குப் பிறகு நாடு செழிப் படையப் போகிறதே, என்பதனால்தான்.

பளபளவென்றிருந்த கத்தியை எடுத் துக் கொண்டு ஒரு முனிவர் வந்தார். சதமன்யு தன் தலையைப் பலிபீடத்தில் பதிய வைத்துக் கொண்டான்.



கட கட கட கட...

மக்கள் திடுக்கிட்டனர். திடீரென்று வானம் 'கட கட'வென்று சிரித்தது. ஆம், இடி இடித்தது. மணி ஓசைகளும் தேவ வாத்தியங்களும் முழங்கின. சதமன்யு விண்மீது புஷ்ப மழை பொழிந்தது. மழைத் தூற்றல் விழ ஆரம்பித்தது.

அடுத்த சில விநாடிகளில் வெள்ளை யானையின் மீது அமர்ந்து இந்திரன் யாக மண்டபத்தில் தோன்றினார். முனிவர்கள் இந்திரனை ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பித் தனர். சதமன்யுவின் கண்களில் நீர் பொங்கியது.

சதமன்யுவை இந்திரன் தமது மார்புடன் தழுவிக் கொண்டார். ''குழந்தாய்! உன்னுடைய தேசபக்தியைப் பார்த்து மிகவும் சந்தோஷப்படுகிறேன். எந்தத் தேசத் துப் பாலகர்கள் தேசத் துக்காகத் தங்கள் உயிரை அர்ப்பணம் செய்யத் தயாராக இருக்கிறார் களோ, அவர்கள் மிகவும் மெச்சத் தகுந்தவர்கள். அந்த நாடு என்னுடைய தேவலோகத்தை விட உயர்ந்ததாகும். உன் னைப் போன்ற தேசபக்தி உள்ள சிறுவர்களைப் பெறுவதால் நாடு தலை நிமிர்ந்து நிற்கிறது. இப் பொழுது உன்னுடைய உயிர் பலியாகாமலேயே இந்தத் தேசத்துக்கு யாகத்தின் பலன் கிடைக் கும். நீ மிகவும் மெச்சத் தகுந்தவன்'' என வாழ்த்தினார்.

அப்புறம் என்ன: மழையோ மழை என்று வானம் பொழிந்தது. பூமி குளிர்ந்தது. முன்பு இருந்த செழிப்பை நாடு மீண்டும் பெற்றது. மக்கள் ஆனந்தமாக வாழ்ந்தனர், சதமன்யு வின் தியாகத்தால்.



டெலிபோன் பேசுகிறது!

அட்டைப் பெட்டிகளின் நடுவிலே துவாரமிட்டு அவைகளை நூலினால் இணைத்து டெலிபோன் தயாரித்துக் கொண்டிருந்தான் ரமணி. அவன் அருகிலே உஷா ஆவலோடு அண்ணா செய்யும் காரியத்தைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள். ரமணி அதைச் செய்து முடித்ததும் ஒரு பெட்டியை வாங்கிக் காதில் வைத்துக் கொண்டு எட்டப் போய் அண்ணா பேசுவதை நூலின் வழியே கேட்டுக் களிக்கக் காத்துக் கிடந்தாள் அவள். அப்போது ஹாலிலிருந்த மணி கிணுகிணுத்தது.



''ட்—ரிணிணிங்... ட்-ரிணிணிங்..... ட்-ரிணிணிங்....!''

தன் காரியத்திலே கவனமாக இருந்த ரமணிக்கு அது தலைவேதனையாக இருந்தது. ஆத்திரத்தோடு டெலிபோனைப் பார்த்தான். அண்ணாவின் பார்வையிலிருந்தே அவன் கருத்தை உணர்ந்து கொண்ட உஷா ஓடிப்போய் டெலிபோனை அதன் பீடத்திலிருந்து எடுத்துக் கீழே வைத்துவிட்டுத் திரும்பினாள்.

''இந்தா.... இந்தா... உஷா! இப்படிச் செய்யாதே. இது தவறு. நான் எதற்காக மணியடித்தேன்? உன்னோடு பேச வேண்டும் என்பதற்காகத்தானே? அப்படி இருக்க என்னை எடுத்துக் கீழே வைப்பது நியாயமா?'' என்று ஒரு குரல் கணீரென்று பேசிற்று. திடுக்கிட்டுப் போன உஷாவுக்குப் பேசியது யார் என்று புரியவில்லை. சுற்று முற்றும் பார்த்தாள். யாரையும் காணவில்லை. ரமணிகூடத் திகைப்புடன் தான் மேற்கொண்டிருந்த காரியத்தை நிறுத்திவிட்டு உஷாவின் அருகில் வந்து இங்குமங்கும் பார்த்தான்.

''என்ன ரமணி! அப்படிப் பார்க்கிறாய்? யார் பேசியது என்றா? நான்தான் பேசுகிறேன்'' என்றது அந்த மர்மக் குரல்.

''நான்தான் என்றால் யார்?'' என்றான் ரமணி.

''நானேதான்! டெலிபோன்தான் பேசுகிறேன். மணி அடித்தால் நான் உங்களோடு பேச விரும்புகிறேன் என்றுதானே அர்த்தம்? இது தெரியாதா உனக்கு?'' என்றது, டெலிபோன், தனது இனிய குரலில்.

ரமணிக்கும் உஷாவுக்கும் தாங்க முடியாத வியப்பு. டெலிபோன்மூலம் வெகு தூரத்திலுள்ள மனிதர்களுடன் பேசுவதையும், எங்கிருந்தோ யாரோ பேசியதை டெலிபோன் மூலம் கேட்பதையும்தான் அவர்கள் பார்த்திருக்கிறார்கள். இன்று டெலிபோனே பேசுவதென்றால் அவர்களுக்கு அதிசயமாக இருக்காதா?

டெலிபோன் அவர்கள் வியப்பைப் புரிந்துகொண்டது போலத் தொடர்ந்து பேசியது.

''என்னைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?'' என்று கேட்டது.

''நீ டெலிபோன் என்று தெரியும். வெகு தூரத்தில் உள்ளவர்களோடு உன் மூலமாகப் பேசலாம் என்றும் தெரியும்'' என்றான் ரமணி.

டெலிபோன் ஒருதடவை தொண்டையைக் கனைத்துக்கொண்டது. ''என்னைப் பற்றி இவ்வளவுதானா தெரியும்? தொலைபேசியான நான் வெகுதூரத்திலிருந்து பேசுபவரின் குரலை உன் காதில் விழும்படி எப்படிச் செய்கிறேன்; அது என்னால் எப்படி முடிகிறது என்ற விவரமெல்லாம் உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டது டெலிபோன்.

''தெரியாதே.....'' என்றார்கள் ரமணியும் உஷாவும் ஏககாலத்தில்.

''நான் பிறந்து வளர்ந்து உழைக்கும் கதையைச் சொல்கிறேன், கேட்கிறீர்களா?'' என்றது டெலிபோன். இருவரும் ஆவலோடு அது சொல்லப்போகும் கதையைக் கேட்கத் தயாரானார்கள்.

''நீங்கள் இருவரும் என் கதையைக் கேட்க முன்வந்ததைக் கண்டு எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. என்னைப் பற்றி நான் இரண்டு வார்த்தைகள் சொல்ல யாருமே அனுமதித்ததில்லை. அது போகட்டும் ரமணி. நான் உன்னை ஒன்று கேட்கிறேன். உன் அப்பா வாசலிலிருந்து உன்னைக் கூப்பிடுகிறார். அதை நீ எப்படி உணருகிறாய்?''

ரமணி சிரித்தான். அவனுக்கு டெலிபோனின் கேள்வி விசித்திரமாக இருந்தது. ஐந்தாவது படிக்கும் அவனுக்கு இதுகூடவா தெரியாது?

''அப்பாவின் குரல் என் காதில் விழுகிறது. ஆகவே அவர் என்னை அழைக்கிறார் என்பதை நான் உணர முடிகிறது'' என்றான்.

''இந்தப் பதிலை நீ சொல்லுவாய் என்று எனக்குத் தெரியும். அப்பாவின் குரல் உன் காதில் எப்படி விழுகிறது ? விழுந்த அந்த ஒலி அப்பாவின் கருத்தை உன் மூளைக்கு அறிவிக்கக் காதில் என்ன மாற்றங்களை அடைகிறது என்று தெரிந்தால் நான் எப்படி வேலை செய்கிறேன் என்பதை நீ சுலபமாகப் புரிந்து கொள்ளலாம்.

''டமாரத்தைப் பார்த்திருக்கிறீர்களா? அதைக் குச்சியால் தட்டிவிட்டு அதன் தோல் பாகத்தின் மீது விரலை வைத்ததுண்டா?'' என்று உஷாவிடம் மற்றொரு கேள்வியைப் போட்டது டெலிபோன்.

''ம் ஹுஂம்....'' என்றாள் உஷா. ''ரமணிக்கு மாமா ஒரு டமாரம் வாங்கிக் கொடுத்திருக்கார். ஆனால் அதை நான் தொடவே கூடாது என்று சொல்லி விட்டான்!'' தன் மீது குற்றம் சாட்டிப் பேசவே ரமணிக்கு ஆத்திரம் பொங்கி வந்தது. ஆனால் டெலிபோன் முன்னிலையில் தன் கோபத்தைக் காட்ட விரும்பாமல் பேசாமல் இருந்தான்.


''இனிமேல் ரமணி அப்படியெல்லாம் நடந்து கொள்ள மாட்டான். டமாரத்தை அடித்ததும் அதன் தோல் மீது கை வைத்தால் எப்படி இருக்கும் என்பதை நான் சொல்லுகிறேன். அந்தத் தோல் அதிர்ந்து முன்னும் பின்னும் அசைவதை உன் விரலால் உணரலாம்.''

உஷா தன் கையால் டமாரத்தை அடிக்காவிட்டாலும் தன் அண்ணா அடிப்பதைப் பார்த்திருக்கிறாள். அதன் சத்தத்தைக் கேட்டிருக்கிறாள். டமாரத்துக்கும் டெலிபோனின் கதைக்கும் என்ன சம்பந்தம் என்றுதான் ரமணிக்கும் உஷாவுக்கும் விளங்கவில்லை.

''டமாரத்தின் தோல் மேலும் கீழும் அசையும்போது சுற்றிலுமுள்ள காற்றும் அசைகிறது. சலனமற்ற நீரிலே ஒரு கல்லைப் போட்டால் எப்படி அடுக்கடுக்காக வளையங்கள் தோன்றி விரிந்து கரையிலே போய் மோதி மறைகிறதோ, அதே போல் டமாரத்தின் தோல் அசைவினால் காற்றில் ஏற்படும் சலனம் அருகிலுள்ள உன் காதில் வந்து தாக்குகிறது. காற்று சுமந்து வந்த டமார ஒலியை நீ உணருகிறாய். பிறர் பேச்சைக் கேட்பதும் டமாரத்தில் ஒலி உண்டாக்கி உணர்வதைப் போலத்தான். உன் தொண்டையிலிருந்து உண்டாகும் ஒலி காற்றை அசைக்கிறது. அந்த அசைவினால் ஏற்பட்ட ஒலி அலைகளைச் சுமந்து கொண்டு வரும் காற்று கேட்பவரின் காதில் போய்த் தாக்குகிறது. காதில் உள்ள சூட்சுமமான ஓர் ஏற்பாட்டினால் காற்று தாக்கிய அதிர்ச்சியை மூளை ஒழுங்குபடுத்தி உணர்ந்து கொள்ளுகிறது.''

ரமணிக்கும் உஷாவுக்கும் டெலிபோன் சொல்லும் விஷயம் ரொம்பவும் சுவாரசியமாக இருந்தது. குறும்புக்கார உஷா, ''உனக்கு எங்களைப்போல் தொண்டையும் காதும் இருக்கிறதோ?'' என்று ஒரு கேள்வி கேட்டாள்.

''ஓ.... இருக்கிறதே ! என்னை நன்றாக உற்றுக் கவனித்தாயானால் என் உடல் ஒரே பாகமல்ல, இரண்டு உறுப்புக்களால் ஆனது என்பது தெரியும். ஒன்றை உன் காதருகிலும் மற்றதை நீ பேசுவதற்கு வாயின் சமீபமும் வைத்துக் கொள்ளுகிறாயல்லவா ? உன் வாயருகில் உள்ள பகுதிதான் என்னுடைய காது. உன் காதருகில் இருக்கிறதே அதுதான் என்னுடைய குரல் வளை — அதாவது தொண்டை. உனக்கு இந்தச் செய்தி வியப்பாக இருக்கிறதா? முதலில் என்னுடைய தொண்டையின் அமைப்பைப் பற்றிச் சொல்லுகிறேன்'' என்றது டெலிபோன்.



ரமணிக்கும் உஷாவுக்கும் முதலில் டெலிபோனின் தொண்டைப் பகுதியைத் தங்கள் காதருகில் ஏன் வைத்துக் கொள்ளுகிறோம் என்பது புரியவில்லை. ஆனால் சட்டென்று தொண்டையிலிருந்து உண்டாகும் ஒலி காற்றில் சலனங்களை ஏற்படுத்துவதனால்தான் நம்மால் பிறர் பேசுவதைக் கேட்க முடிகிறது என்று அது சற்று முன்பு விளக்கியது நினைவுக்கு வரவே, ''என் காதிலே ஒலி அலைகள் வந்து மோதும்படி செய்கிறதா உன் தொண்டைப் பாகம் ?'' என்று கேட்டாள் உஷா.

''கரெக்ட் ! அதுவேதான். என் குரல் வளையில் ஒலிகளை உண்டாக்குவது எது தெரியுமா ? மின்சாரம். உன் அப்பா, வாய்க் குழலான என் காதில் பேசும்போது, அவர் பேச்சினால் அதிர்ச்சியடைந்த காற்று என் காது பாகத்திலுள்ள 'டயாஃப்ரம்' என்ற பாகத்தை மேலும் கீழும் அசையும்படி செய்கிறது.''

''டயாஃப்ரமா? அது என்ன? ஏதோ எங்களுக்குப் புரியாத பாஷையிலே பேச ஆரம்பித்து விட்டாயே!'' என்றான் ரமணி.

டெலிபோன் இலேசாகச் சிரித்து விட்டுக் கூறியது: ''புரியாத புதிர் எதையும் நான் போட்டுவிடவில்லை ரமணி.



டமாரத்திலுள்ள அதிரும் பாகத்தைப் பற்றி நான் சொல்லவில்லையா? அதுவே தான் இந்த டயாஃப்ரம் என்பது. டமாரத்தில் இந்த 'டயாஃப்ரம்' தோலினால் ஆனது. ஆனால் என் உடலிலோ 'இது மெல்லிய உலோகத் தகட்டினால் ஆக்கப்பட்டிருக்கிறது.

''நீ பேசும் போது உண்டாகும் மாறுபட்ட ஒலி அலைகள் டயாஃப்ரத்தில் தாக்கி அதை மேலும் கீழும் அசையச் செய்கிறது. டயாஃப்ரத்தின் கீழே பல்லாயிரக்கணக்கான கரித் துகள்கள் அடங்கிய குழியுள்ளது இருக்கிறது. பாட்டரி மூலம் இந்தக் கரித் தூளில் வீர்யமற்ற மின்சாரம் சதா ஓடிக் கொண்டிருக்கிறது. டயாஃப்ரம், தான் அசைவதினால் மாறுபட்ட தொடர்ச்சியான அழுத்தங்களைப் பதிக்கிறது. டயாஃப்ரம் கரித் தூளில் அதிக அழுத்தத்தை உண்டாக்கினால் என்னுள்ளே அதிக மின்சார ஓட்டம் உண்டாகும். குறைந்த அழுத்தத்தில் குறைவான மின்னோட்டம் ஏற்படுகிறது. ஒலி அலைகளை மின்சார அலைகளாக மாற்றுவது என் கீழ் உள்ள இந்தக் கரித் தூள்தான்.''

''அது சரி, இந்த உன் டயாஃப்ரம் நாங்கள் பேசும் ஒலியை வெகுதூரத்துக்கு எப்படிக் கொண்டு செல்லுகிறது?'' என்றாள் உஷா.

'' தந்திக் கம்பங்களையும், அந்தக் கம்பங்களோடு இணைத்துக் கட்டப்பட்டுள்ள கம்பிகளையும் நீ பார்த்திருக்கிறாய் அல்லவா? வாய்க் குழலாகிய என் காதில் உள்ள டயாஃப்ரம் என்ற உலோகத் தட்டில், உன் குரலில் ஏற்றத்தாழ்வு ஒலிபேதங்களுக்கு ஏற்றபடி அதிர்ச்சி ஏற்படுகிறது என்று சொன்னேனல்லவா? அந்த அதிர்ச்சி மின்சார அலைகளாக மாறுகிறது. ஒலி அலைகளிலுள்ள பேதங்களைப் போலவே மின் அலைகளிலும் அதே வித்தியாசங்கள் இருக்கும். இந்த மின் அலைகளைத்தான் உலோகக் கம்பிகள் பல்வேறு இடங்களுக்குத் தாங்கிச் செல்லுகிறது.''

''மின்சார அலைகள் எப்படி....?'' என்று புரியாமல் தவித்தாள் உஷா.

''மின்சார அலைகள் எப்படி உன் பேச்சைப் பிறருக்குத் தெரிவிக்கும் என்றுதானே ஐயப்படுகிறாய்? இதுவரை நான் என் காது என்று சொல்லப்படும் வாய்க் குழலின் வேலை முறையைப் பற்றிச் சொன்னேன். என்னுடைய குரல் வளை (தொண்டை) என்று சொல்லப்படும் காதுக் குழலின் அமைப்பையும் அதன் வேலை முறையையும் பற்றிச் சொன்னால் உன் சந்தேகங்களெல்லாம் தீர்ந்துவிடும். பிறர் பேசிய பேச்சை என் தொண்டையின் மூலம் உன் காதுகளுக்கு உணர்த்துவதும் மின்சாரம்தான்.''

''விந்தை மின்சாரம்தான் உன் தந்தை என்று சொல்லு'' என்றான் ரமணி.

''ஆமாம்! ரொம்பச் சரியாகச் சொல்லி விட்டாயே. என் தொண்டை என்பது நெருக்கமாகக் கம்பிகளால் சுற்றப்பட்ட ஓர் இரும்புத் துண்டமும் (மின் காந்தம்) அதன் அருகே ஒரு மெல்லிய உலோகத் தகடுமாக அமைக்கப்பட்டுள்ள ஒரு பாகம். ஓர் இரும்பு ஊசியின் அருகே காந்தத் துண்டைக் கொண்டு போனால் என்ன ஆகும் என்று உனக்குத் தெரியும். ஊசி துள்ளிக் குதித்துக் காந்தத் துண்டில் ஒட்டிக் கொள்ளும், இல்லையா?''

அதே போல் கம்பிகளின் வழியே ஒலி அலையிலிருந்து பிறந்த மின்சாரம் பாயும்போது இரும்புத் துண்டில் காந்தம் உண்டாகித் தன் அருகே உள்ள மெல்லிய உலோகத் தகட்டை ஆகர்ஷித்து அசையச் செய்கிறது. ஒலி அலைகளின் பேதங்கள் மின் அலையிலும் இருக்கும் என்று சொன்னேன் அல்லவா? மாறுபட்ட மின் அலைகளுக்கு ஏற்ப உலோகத் தகடு அசைக்கப்படுகிறது. உலோகத் தகட்டின் அசைவினால் காற்றில் சலனம் உண்டாகிறது. இந்தச் சலனமே மின் அலை ஒலி அலையாக மாறிய நிலை.

''சுருங்கச் சொல்லுவதானால் உன் பேச்சு ஒலி அலைகளாக என் காதில் தாக்க அதை நான் மின் அலைகளாக மாற்றி நீ யாருடன் பேசுகிறாயோ, அவருக்கு அனுப்புகிறேன். அவர் பேசிய பேச்சு மின் அலைகளாக மாறி என் தொண்டைக்கு வந்ததும் அங்குள்ள இரும்புத் துண்டில் காந்தத்தை உண்டாக்க அது தன் முன்னால் உள்ள உலோகத் தகட்டை ஆகர்ஷித்து அசைக்கிறது. மின் அலைகள் சுமந்து வந்த செய்தி ஒலி அலைகளாக மாறுகிறது. அந்த ஒலி அலைகள் உன் காதிலே தாக்க நீ பேசியவரின் பதிலை உணர்ந்து கொள்ளுகிறாய்.''

டெலிபோன் தன் வாயையும் காதையும் பற்றிச் சொன்ன செய்திகள் ரமணியையும் உஷாவையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தின. ''உட்கார்ந்த இடத்திலிருந்து எந்த நேரத்திலும் யாருடனும் பேசும் சாதனமான நீ எப்போது பிறந்தாய்? உன்னை உருவாக்கிய அந்த அறிஞர் யார்?'' என்றான் ரமணி.

அந்தக் கதை அடுத்த இதழில் என்றது டெலிபோன். — **கிருஷ்ணவேணி**





குளிக்கப் போய்ச் சேற்றைப்
பூசிக்கிட்டவரையும்...

மலைப்பாம்புக்கு
மருத்துவம்
பார்க்கிறவரையும்...


புகைப்படங்கள் :
எல்லிஸ் ஆர். டங்கன்




தன் தலையில் தானே
மண்ணைப் போட்டுக்
கொண்டவரையும்...



தலைகீழா நின்னுவது கண்டு பிடியுங்கள்!



''வால் முடிச்சைக் கேட்கிறயா? திருடன் வந்தால் ஞாபகமாகக் குரைக்கணுமாம்! அதுக்குத்தான்''
''வால் முடிச்சைக் காணுமே''
''நேற்று முடிச்சவிழ்க்கித் திருடன் வந்தான் போலிருக்கிறது!''
சிரிக்கச் சிரிக்க
முதல் ஈ :
அப்பப்பா! கரும்புன்னுப் போதும். பசங்களெல்லாம் எப்படி மொய்க்கிறாங்க பார்த்தாயா!
இரண்டாவது ஈ :
ஆமாம்! ஈ மொய்க்க இடம் கொடுக்க மாட்டேங்கறாங்களே!
சங்கீத வித்வான் :
என்ன பண்டாரம், உங்களுக்கு நல்ல சாரீரம் இருப்பதற்கு ஐந்து கட்டை சுருதி வைத்து பாடலாமே!
பண்டாரம் :
வேண்டாங்க! இந்தக் கட்டை சுருதி வேறு கேடா?
காண்டாமிருகம் :
ஏதோ இந்த மழையிலே முகமாவது நனையாமல் இருக்கட்டுமேன்னுதான்!
சாமா
டொக்! டொக்
''இந்த மரங்கொத்தி 'டொக் டொக்'னு கொத்துகிற சப்தத்திலே, பாவம்! அந்தப் பொந்திலுள்ள அணில் எப்படித்தான் இருக்க முடிகிறதோ!''
''நான் பொந்தில் இல்லையே, இங்கேதானே இருக்கேன்!''



இளவரசனை வென்றவள்

முன்னொரு காலத்தில் ஓர் அரச குமாரன் இருந்தான். அவன் ரொம்ப அழகன், வீரன், புத்திமான். அதே மாதிரி கர்வக்காரனாகவும் இருந்தான். அவனை மணந்து கொள்ளப் பல இளவரசிகள் தவம் கிடந்தார்கள். ஆனால் அந்த இளவரசனோ எல்லோரையும் நிராகரித்துக் கொண்டிருந்தான்.

கடைசியில் இளவரசன் தன்னை மணப்பவள் எப்படி இருக்க வேண்டும் என்பதை அறிவித்தான்.

"என்னை மணக்க வரும் பெண் தேரில் வரக் கூடாது. குதிரை மீதும் வரக் கூடாது. நடந்தும் வரக் கூடாது. அவள் கால் பூமியில் படவே கூடாது. அவள் பசியோடு இருக்கக் கூடாது. ஆனால் வயிறு நிறையச் சாப்பிட்டும் இருக்கக் கூடாது. உடலில் எவ்வித ஆடையும் உடுத்தி யிருக்கக் கூடாது. ஆனால் அவள் உடலை ஆடை மூடி இருக்கவும் வேண்டும். அவள் என்னைத் தேடி இரவிலும் வரக் கூடாது, பகலிலும் வரக் கூடாது. இந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய எந்தப் பெண் வந்தாலும் அவளை என் மனைவியாக ஏற்றுக் கொள்ளுகிறேன்" என்றான். இளவரசனின் இந்த விதண்டாவாத விபரீத நிபந்தனைகளைக் கேட்டவர்கள் வாயடைத்துப் போனார்கள். 'இது என்ன பைத்தியக்காரத்தனம்! திருமணமே செய்து கொள்ளக்கூடாது என்பதற்கு இது ஒரு புதுவிதமான தந்திரமா?' என்று எண்ணினார்கள்.


ஆனால் அந்த நாட்டில் இந்த இளவரசனையும் மிஞ்சக்கூடிய ஒரு புத்திசாலிப் பெண் இருந்தாள். எப்படியும் ராஜகுமாரனைத் தன் கணவனாக அடைந்து விடுவது என்று முடிவு செய்தாள். அவள் அரச குடும்பத்தவள் அல்ல. ஆனால் அழகி; அறிவாளி.

இளவரசனைச் சந்திக்க, அவன் கரம் பற்றக் கிளம்பினாள் அந்தக் கன்னி. எப்படி? மூன்று கடலைகளை எடுத்து வாயில் போட்டுக் கொண்டாள். மென்று தின்றாள். அவள் இப்போது பட்டினி இல்லை. ஆனால் வயிறு நிறையச் சாப்பிட்டிருப்பவளும் இல்லை. மீன் பிடிக்கும் வலையை எடுத்துத் தன் உடலில் போர்த்திக் கொண்டாள். இப்போது அவள் ஆடை ஏதும் உடுத்தவில்லை; ஆனால் அம்மணமும் இல்லை. அடுத்து ஒரு கொழுத்த செம்மறியாட்டின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டு அதை ஓட்டினாள். இப்போது அவள் ரதத்தில் போகவில்லை. குதிரை மீதும் சவாரி செய்யவில்லை. அவள் கால்கள் பூமியைத் தொட்டும் தொடாமலும் இருந்தன. ஆனால் அவள் பிரயாணம் செய்தாள். இந்தக் கோலத்தோடு, விடியற்காலை வேளையில் அரண்மனைக் கதவைப் போய்த் தட்டினாள். அது இரவுமல்ல, பகலுமல்ல. காவல்காரர்கள் இந்தக் கோலத்திலுள்ள ஒரு பெண்ணை அரண்மனைக்குள் அனுமதிக்க மறுத்தார்கள். அவர்களுக்கிடையே நிகழ்ந்த வாக்குவாதத்தின் கூச்சலில் இளவரசன் கண் விழித்துக் கொண்டு எழுந்தான். ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தான்.

"உங்கள் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து வந்திருக்கிறேன், உங்களை மணக்க. என்னை இவர்கள் உள்ளேவிட மறுக்கிறார்கள்" என்றாள் அந்தத் துணிச்சல்காரப் பெண். இளவரசன் அவள் நிலையைக் கண்டான். அவள் அறிவையும் அழகையும் பார்த்தான். அப்புறமென்ன? அரண்மனைக்குள் வர அவளுக்கு அனுமதி கிடைத்தது மட்டுமா, சிங்காதனத்திலும் அவன் அருகே அமரவும் இடம் கிடைத்தது. காத்திருந்து மணந்தாலும் அழகும் திறமையும் அறிவும் உள்ள மனைவி கிடைத்ததில் இளவரசனுக்குச் சந்தோஷம். அரசகுமாரனை மணந்ததில் அவளுக்கும் பெருமை. மகாராணி கிடைத்ததில் மக்களுக்கு மகிழ்ச்சி. உங்களுக்கும் தானே?

— கிண்கிணி





ஊதினால் உயிர்விடும் பன்றிகள்

உலகிலுள்ள பெரிய தீவுகளின் வரிசையில் மூன்றாவது இடத்தைப் பெறும் தீவு எது தெரியுமா? போர்னியோ. இதன் பரப்பளவு 290000 சதுர மைல்கள். தீவு முழுதும் அநேகமாக மலைகள்தான். கடற்கரையோரப் பகுதிகளில் சதுப்பு நிலங்கள். பெட்ரோல் எண்ணெய் வளம் மிக்கது போர்னியோ. அது மட்டுமல்ல; இங்கு வைரச் சுரங்கங்களும் உண்டு. ஆனால் இங்கு கிடைக்கும் வைரங்கள் மீது ஒரு மஞ்சள் நிறம் இருப்பதால் ஆப்பிரிக்க வைரங்களைப் போல் ஜ்வலிப்பதில்லை, மதிப்பும் கிடையாது.

இத்தீவின் பழங்குடி மக்களுக்கு டயாக்ஸ் என்று பெயர். இந்த டயாக்ஸ் வகுப்பினரில் இருநூறு பிரிவுகள் உண்டு. ஒவ்வொருவரும் வெவ்வேறான பழக்க வழக்கங்களை உடையவர்கள். போர்னியோத் தீவு அடர்ந்த கானகங்கள் நிரம்பியது. இந்தப் பழங்குடிகள் இக்கானகத்தின் மையத்தில்தான் வாழ்கிறார்கள். இன்று இவர்கள் மக்களோடு தோழமை கொள்பவர்களாக இருந்தாலும் ஒரு காலத்தில், அந்நியர்களைக் கண்டால் அவர்கள் தலையை வெட்டிக் கூத்தாடும் கொடிய குணம் படைத்தவர்களாகத்தான் விளங்கினார்கள். இந்தப் பழங்குடியினர் எல்லோரும் சேர்ந்து ஒரு நீண்ட குடிசையில் வசிக்கிறார்கள். இந்த நீண்ட வீட்டுக்கு லாமின் என்று பெயர். இக்குடிசைகள் தரை மட்டத்திலிருந்து ஆறு அடி உயரமுள்ள கம்பங்களின் மீது அமைக்கப்பட்டிருக்கும். இதற்குப் படிகள் உண்டு. குடிசையின் அடிவாரம் இவர்களின் வளர்ப்பு மிருகங்களான கறுப்பு, வெள்ளைப் பன்றிகள், நாய்கள், பூனைகள், கோழிகள் ஆகியன வசிக்கப் பயன்படுகின்றன. ஒவ்வொரு குடும்பத்துக்கும் தனித்தனியாக அறைகள் உண்டு. குடிசை நெடுகிலும் உள்ள வராந்தா எல்லாக் குடும்பங்களுக்கும் பொதுவானது. நடைபாதையும்கூட. இவர்கள் முக்கிய உணவு அரிசிதான். சமூகம் முழுதும் விதைப்பில் ஈடுபடும். சாகோ என்னும் ஒருவிதப் பனைமரமும் உணவுப் பொருளைத் தருகிறது. கடலோரத்து மலைகளிலும் குடிசைகளிலும் பறவைகளின் கூடுகள் ஏராளம். இவைகளின் முட்டையையும் உணவாகக் கொள்ளுவார்கள்.

உழவுத் தொழிலுக்கு முதலில் காட்டை அழிக்கிறார்கள். நிலத்தைப் பண்படுத்துகிறார்கள். பிறகு டயாக் ஆண்கள் அந்தப் பூமியில் குச்சியினால் துளை செய்தபடி வரிசையாகப் போவார்கள். இவர்களைத் தொடர்ந்து பெண்களும் குழந்தைகளும் அந்தத் துளைகள் ஒவ்வொன்றிலும் பத்து நெல் மணிகளைப் போட்டு விதைப்பார்கள். இந்த விதை நெல்லை மூங்கில் குழாய்களில் எடுத்துப் போவார்கள். காட்டு நிலமானதால் வளமற்றுக் கிடக்கும். ஆகவே ஒரு முறை விளைவித்த நிலத்தை மறுமுறை பயன்படுத்துவதில்லை. காட்டின் வேறு பகுதியை அழித்துப் புது நிலம் உருவாக்குகிறார்கள்.

போர்னியோத் தீவின் காடுகளில் ஏராளமாகவும் செழிப்பாகவும் வளர்

பது மூங்கில். ஆகவே இந்தத் தீவின் பழங் குடிகள் மூங்கிலை எல்லாக் காரியங்களுக்கும் பயன்படுத்துகிறார்கள். நீர் சேந்திக் கொண்டுவரப் பாத்திரமாகவும் கூட மூங்கில் குழாய்களைப் பயன்படுத்துகிறார்கள். கீழுள்ள படத்தில் ஒரு பெண் மூங்கில் கூடையில் நீர் நிரம்பிய மூங்கில் குழாய்களைச் சுமந்து போவதைக் காணலாம்.




'டயாக்' இனத்தவர் வேட்டையாடுவதில் சூரர்கள். காட்டுப் பன்றியையும் அநாயாசமாக வேட்டையாடுவார்கள். இதற்கு இவர்கள் பயன்படுத்துவது வில்லும் அம்புமல்ல; ஊதுகுழல்தான். இதற்கு 'ப்ளோ பைப்' என்று பெயர். ஆறு அடி நீளமுள்ள மூங்கில் குழாய். இக்குழாயினுள் கூரிய அம்பு போன்று ஒரு பொருளைப் போட்டிருப்பார்கள். இது மரத்தாலானது. அதற்கு விஷத்தினால் பூச்சுக் கொடுத்திருப்பார்கள். வேட்டையாடப்பட வேண்டிய மிருகம் பறவையை நோக்கி இக்குழலை வேகமாக ஊதுவார்கள். இதற்கு அனுபவமும் லாகவமும் தேவை. குழலினுள்ளிருக்கும் விஷம் தோய்ந்த மரக் குச்சி குறி தவறாமல் போய்ப் பாயும். இந்த ஊது குழல்கள் ஈட்டியாகவும் பயன்படுகிறது. அதன் ஒரு முனையில் கூரான ஆயுதத்தை இணைத்திருப்பார்கள். விஷம் இவ்வகுப்பாரிடம் பலவிதங்களில் பயன்படுகிறது. ஒரு தாவர வேரிலிருந்து தயாரிக்கும் விஷத்தை மீன் பிடிக்கப் பயன்படுத்துகிறார்கள். இதனால் நதியிலுள்ள மீன்கள் செயலிழந்து போகின்றன.


ஆதிகாலத்தில் டயாக் இனத்தவர் தங்கள் காதலியின் அன்பையும் மதிப்பையும் பெற விரோதிகளின் தலைகளை வெட்டி, வெற்றிக்கோப்பைகளைப் போல் தங்கள் குடிசையின் உத்தரத்தில் கட்டித் தொங்கவிட்டிருப்பார்கள். தலைகளின் எண்ணிக்கை அவன் வீரத்துக்குச் சான்று. இந்தப் பழக்கம் இப்போது கிடையாது என்றாலும், தங்கள் மூதாதையரின் ஆவிகளை வழிபடும் வழக்கம் இன்றும் இருக்கிறது. இறந்தவர்களின் ஆவிகளுக்கு அருஞ் செயல்களைப் புரியும் சக்தி இருப்பதாக நம்புகிறார்கள். ஆகவே மூதாதையரின் மண்டை ஓடுகளைத் தங்கள் வீட்டின் நடுவில் கட்டித் தொங்க விட்டிருப்பர். எந்தக் காரியம் செய்வதானாலும் அதன் கீழிருந்தபடிதான் செய்வார்கள், அதன் ஆசியைப் பெற. இவர்கள் நல்ல சங்கீத ரசிகர்களும்கூட. காற்று வாத்தியங்களைக் கையாளுவதில் வல்லவர்கள். பல்வேறு நீளங்கள் உள்ள மூங்கில் குழல்களை அமைத்துக் காற்று வாத்தியங்களை உருவாக்குகிறார்கள். பாட்டும் கூத்தும் இரவு வேளைகளில்தான் நடக்கும். நீண்ட பொதுக் குடிசையின் வராந்தா விளக்குகளால் அலங்கரிக்கப்படும். இந்த விளக்குகளுக்குப் பிராணிகளின் கொழுப்பே எண்ணெய். பெண்கள் தந்தி வாத்தியத்தை மீட்டியபடி நடனமாடுவர். ஆண்கள் பறவைகளின் இறகுகளால் அலங்கரித்துக் கொண்டு பறவை நடனம் ஆடுவர். இந்த நடனத்தின் உச்சகட்டத்தில் பார்வையாளர்கள் ஆனந்த மிகுதியில் கூச்சலிட்டுக் கொக்கரிப்பார்கள். உழுவதற்கும் வண்டி இழுக்கவும் சவாரி செய்யவும் எருமைகளைப் பயன்படுத்துகிறார்கள்.













வாஷிங்டன் முதல் நிக்ஸன் வரை

இப்பொழுது அமெரிக்க ஜனாதிபதியாக இருப்பவர் திரு ரிச்சர்ட் நிக்ஸன் என்பது உங்களுக்குத் தெரியும்! முதல் அமெரிக்க ஜனாதிபதி யார் தெரியுமா? ஜார்ஜ் வாஷிங்டன். ஜான் ஆடம்ஸ் என்பவர் முதல் உபஜனாதிபதி.

அதிக ஆண்டுகள் ஜனாதிபதியாக இருந்தவர் ஃபிராங்ளின் டி.ரூஸ்வெல்ட், இவர் பன்னிரண்டு ஆண்டுகளும் முப்பத்தொன்பது நாட்களும் பதவி வகித்திருக்கிறார். தொடர்ச்சியாக நான்கு முறைகள் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர் இவர் ஒருவரே.

மிகவும் குறைந்த காலம் ஜனாதிபதியாக இருந்தவர் வில்லியம் ஹென்றி ஹாரிஸன். பதவிக் காலம் முப்பத்திரண்டே நாட்கள்தான்!

மிகவும் உயரமான ஜனாதிபதி ஆபிரஹாம் லிங்கன் (6"—4"). மிகவும் குள்ளமான ஜனாதிபதி ஜேம்ஸ் மாடிஸன் (5"—4"). மிகவும் குறைந்த எடையுள்ள ஜனாதிபதியும் இவரே! இவருடைய எடை நூறு பவுண்டுகள். வில்லியம் ஹோவர்டு டாஃப்ட் என்பவர் அதிக எடையுள்ள அமெரிக்க ஜனாதிபதி. இவருடைய எடை 300லிருந்து 332 வரை இருந்தது!

தந்தையும், மகனும் ஜனாதிபதியாக இருந்திருக்கிறார்கள். அவர்கள்தான் ஆடம்ஸ் ஜான் க்வின்ஸி ஆடம்ஸ். — தாத்தாவும் பேரனும் ஜனாதிபதியாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் வில்லியம் ஹென்றி ஹாரிஸன், பெஞ்சமின் ஹாரிஸன்.

ஜனாதிபதி தியோடார் ரூஸ்வெல்ட்டும், பிராங்ளின் டி. ரூஸ்வெல்ட்டும் ஒன்றுவிட்ட சகோதரர்கள். அதைப்போல் ஜேம்ஸ் மாடிஸனும், ஜாகரி டெய்லரும் ஒன்றுவிட்ட சகோதரர்கள்.

தியோடர் ரூஸ்வெல்ட்தான் முதன் முதலாக 'நோபல்' பரிசு பெற்ற அமெரிக்க ஜனாதிபதி. இரண்டாவதாக வாங்கியவர் உட்ரோ வில்ஸன். ஜேம்ஸ் ஏப்ரம் கார்பீல்டு என்ற ஜனாதிபதி இடது கை பழக்க முள்ளவர்.

அமெரிக்க ஜனாதிபதிகளாக இருந்தவர்களில் இருவர் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் ஹெர்பர்ட் ஹோவர், ஜான் எப். கென்னடி!

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர்களில் மிகவும் வயதானவர் ஹென்றி ஹாரிஸன். அவர் ஜனாதிபதியாக ஆனபோது அவரது வயது 68 ஆண்டுகளும் 23 நாட்களும். மிகவும் குறைந்த வயதில் ஜனாதிபதியாக ஆனவர் தியோடர் ரூஸ்வெல்ட். அவர் பதவிக்கு வந்த போது அவருக்கு வயது 42 ஆண்டுகளும் பத்து-மாதங்களும். ஆனால் இவர் ஜனாதிபதி வில்லியம் மக்கின்லே இறந்ததால் உப ஜனாதிபதி பதவியிலிருந்து ஜனாதிபதி ஆனார். மிகவும் குறைந்த வயதில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஜனாதிபதியானது ஜான் எப். கென்னடிதான்! —காழி ஜெபர்


பலே பாலு!
கற்பனை: வாண்டு
சித்திரம்: செல்லம்
இத்தனை சரளையையும் தோட்டப் பாதையில் பரப்பியாகணும்னு லேசா என்ன? பேஜாரு புடிச்ச வேலை...
ஆ...வ்...வ்...
என்னடா பாலு! ரொம்பப் பிஸியோ? ஏதாவது ஹெல்ப் வேணுமா...? இந்தா...
டல்லடிச்சுப் போயிருந்தியே, இப்ப எப்படி? சுருசுருப்பா இருக்குமே! ஹ...ஹ...ஹா...
சற்றைக்கெல்லாம்
உஷ்...! கொஞ்சம் உட்கார்ந்து களைப்பாறலாம்
பாலுப் பயல் ஓய்வெடுத்துக் கறான் போலே. இன்னும் கொஞ்சம் சரளையை வீசிப் பயலைத் திடுக்கிட வைக்கலாம்.
ஏய்...ய்...
எழுந்திருடா. ஒழுங்கா வேலையைச் செய் பாப்பா. நீ ஓய்ந்திருக்கலாகாது பாலு பாப்பா!
?
கொஞ்ச நேரங்கழித்து
டிக்கி, இந்தச் சரளையை அப்புறப் படுத்தறது பேஜாறுதான். ஆனால் கஷ்டப்பட்டால் பலன் உண்டு. ஒரு ஐந்து ரூபாய் நோட்டை இந்தச் சரளையைக் கீழே கொட்டும்போது அப்பா தவற விட்டுட்டார். இதைச் சரி செய்தால் அது எனக்கே எனக்குன்னு சொல்லிட்டார். தெரிஞ்சுதா?


டேய், பாலு! 'சாரி'டா. சும்மா தமாஷுக்கு உன்னை 'ஃபூல்' பண்ணினேன். இந்த வேலையை நான் செய்யறேன். உனக்கு ஏத்த வேலை இல்லே இது.
ஓ! செய்யேன்... ரொம்ப தாங்க்ஸ்ப்பா!
நீ சும்மா உக்காந்துக்கிட்டிரு. பத்தே நிமிஷத்திலே எல்லாத்தையும் ஒழுங்காக்கிக் காட்டறேன் பாரு.
ரொம்ப ரொம்ப நன்றிப்பா உனக்கு.
சொன்ன மாதிரியே கனகச்சிதமா முடிச்சிட்டியே! இருந்தாலும் நீ திறமைசாலிதாம்பா.
ஆங், இதென்ன பெரிய காரியம்...
உஸ்... ...ஸ்... அப்பாடா...
அது சரி, நீ என்னமோ சொன்னியே, இந்து ரூபாய் நோட்டு அப்பா தவற விட்டுட்டான்னு. அது எங்கேடா காணோம்?
ஓ, அதுவா? ஹ...ஹ...ஹா. அப்படி எந்த நோட்டும் இந்த இடத்திலே விழலே. இந்தக் காரியத்தை உன் மூலமா செய்து முடிக்க ஐயா போட்ட பிளானுக்கும் அது.
என்னடா அது பாலு, ரோஜாச் செடிமேலே படுத்துண்டு? முள்ளுக் குத்தலே?
முள்ளுக் குத்தாம இருக்குமா? என் வயசுக்காரனோட விளையாடி இருக்கணும். தப்புப்பண்ணிட்டேன். அவன் என்னைவிட வயசிலேயும் பலத்திலேயும் பெரியவன்...ம்...



398. 'ஆயிரம் ஏரி நாடு' என்று ஒரு தேசத்துக்குப் பெயர். அது எந்த நாடு?

399. பூமத்திய ரேகையில் உலகின் சுற்றளவு எத்தனை மைல்கள்?

400. பிரான்ஸிலிருந்து இங்கிலாந்துக்கு முதன் முதலில் விமானத்தில் பறந்து வந்தது யார்? எந்த ஆண்டில்?

401. முதன் முதலில் புகைப்படம் எடுக்கப்பட்டது எப்போது?

402. உலகிலேயே மிக உயரமான நீர் ஊற்று எங்குள்ளது?

403. உலகில் வாழும் ஓர் இனத்து மக்களுக்கு மூன்றுக்கு மேல் எண்ணத் தெரியாது. அவர்கள் யார் தெரியுமா?

404. உலகிலுள்ள மிகப் பெரிய தொங்கும் லஸ்தர் விளக்குகள் எங்குள்ளன?

405. தனிப்பட்ட ஓர் அணுவைக் காண முடியுமா?

406. உலகிலேயே மிகப் பெரிய நாடு எது?

407. முதல் கடிகாரத்தைச் செய்தவர் ஜெர்மானியரா, — அமெரிக்கரா, ஸ்விஸ்காரரா?

408. 'விக்டோரியா க்ராஸ்' என்ற மதிப்புமிக்க விருதை மிக இளவயதில் பெற்றவர் யார் தெரியுமா?

409. நத்தையின் வேகம் எத்தனை?

410. 'Y' என்று ஓர் ஊர் இருக்கிறது. எங்கே என்று தெரியுமா?

411. எந்த ஒரு மொழி உலகில் அதிக மக்களால் பேசப்படுகிறது?

412. உலகில் மிகவும் பரபரப்புமிக்க புகை வண்டிச் சந்திப்பு நிலையம் எது?

413. லீப் வருஷத்தை உருவாக்கியது யார்?

414. ரியோடி ஜெனிரோ பிரேஸில் நாட்டின் தலைநகரா?

415. உலகின் மிகப் பழமையான சர்வகலாசாலை எங்குள்ளது?

416. மிகக் குறைந்த எழுத்துக்களைக் கொண்ட மொழி எது?

417. பின்னால் பசை தடவப்பட்ட தபால் தலைகள் பழக்கத்துக்கு வந்தது எப்போது?

418. ஜெட் விமானிகள் எவ்விதப் பேனுக்களை உபயோகிக்கிறார்கள்?

விடைகள்: 398. பின்லாந்து. 399. 24,902 மைல்கள். 400. 1909ம் ஆண்டு ஜூலை மாதத்தில் லூயி பிளெரியாட் என்பவர். 401. முதல் புகைப் படத்தை 1826ல் பிரெஞ்சு விஞ்ஞானியான ஜோஸப் நெஸபோர் நெப்லி எடுத்தார். எட்டு மணி நேரம் 'எக்ஸ்போஸ்' செய்ய வேண்டியிருந்தது. 402. ஸ்விட்ஜர்லாந்திலுள்ள ஜெனிவாவில். பீறிட்டடிக்கும் நீரின் உயரம் 426 அடிகள். 403. அமேஸானில் வாழும் யான்காஸ் இனத்தவர். 404. ரஷ்யாவில் மாஸ்கோ சர்வகலாசாலையிலுள்ள பிரசங்க மண்டபத்தில் எட்டு லஸ்தர் விளக்குகள் உள்ளன. ஒவ்வொன்றும் ஆறு அடுக்குகள் கொண்டது. எடை ஒவ்வொன்றும் இரண்டரை டன்கள். 405. முடியும். எலெக்ட்ரானிக் மைக்ராஸ்கோப் மூலம். இது ஒரு பொருளை 2 மிலியன் மடங்கு பெரிதாக்கிக் காட்ட வல்லது. 406. ரஷ்யாதான். இதன் பரப்பளவு 8,650,000 சதுர மைல்கள். 407. ஜெர்மானியர். பீட்டர் ஹென்லின் என்பது அவர் பெயர். 1510ம் ஆண்டு தயாரித்தார். 408. ஆர்தர் பிட்ஸ்கிப்பன். வி.ஸி. பெறும்போது இவன் வயது பதினைந்து. இந்தியாவில் வீரச் செயல் புரிந்ததற்காக 1860-ல் கொடுக்கப்பட்டது. 409. மணிக்கு இருபத்து மூன்று அங்குலத்திலிருந்து ஐம்பத்தைந்து கெஜங்கள் வரை. 410. பிரான்ஸ் நாட்டில் ஒரு கிராமத்தின் பெயர் இது. 411. வடசீன மொழி அல்லது மாண்டரின். 460 மில்லியன் மக்களால் பேசப்படும் மொழி இது. 412. பிரிட்டிஷ் ரயில் வேக்களின் தென் பிராந்தியத்திலுள்ள க்ளாஃபாம் சந்திப்பு நிலையம் 24 மணி நேரத்தில் 2500 புகை வண்டிகள் இங்கே வந்து போகின்றன. 413. ஜூலியஸ் ஸீஸர். கி. மு. 45ல் உருவாக்கினார். 414. இல்லை. இன்றைய பிரேஸில் நாட்டின் தலைநகர் பிரேஸிலியா. 415. எகிப்திலுள்ள அல் அஸார் சர்வகலாசாலை கி. பி. 989ல் நிறுவப்பட்டது இது. 416. ஹவாயியன் மொழி. இதற்குப் பன்னிரண்டு எழுத்துக்களே. 417. 1840ல். 418. 'காப்பி லரி' இயக்கம் கொண்ட பேனுக்களை. மிக மிக உயரத்தில் பறக்கும்போதும் இவைகளில் மை பொங்கி 'லீக்' ஆவதில்லை.






'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக ஆர். அனந்தநாராயணனால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: சதாசிவம்


சந்தா விவரம்: ஒரு வருடம் ரூ. 7-00 ○ ஆறு மாதம் ரூ. 3-50 ○ வெளிநாடுகள் ரூ. 18-00

வடிவகணிதம் சுலபமாகட்டும், புவியியல் வண்ணமயமாகட்டும்

பைதாகரஸை மிஞ்சுங்கள்; வரைபடத்திற்கு வண்ணமூட்டுங்கள்...கேம்லின் இன்ஸ்ட்ரு-மெண்ட் பாக்ஸ் மற்றும் கலர் பென்ஸில்களை உபயோகியுங்கள். முன்னது சரிநுட்பமாக உபயோகிக்கக்கூடியது, பார்ப்பதற்குக் கவர்ச்சிமிக்கது; பின்னது மென்மையான கரியம் கொண்டது, மழமழப் பானது—இரண்டும் நீடித்து உழைப்பவை, தேய்மானத்தை எதிர்க்கும் தன்மையுடையவை. சிக்கனமானவையும் கூட.

கேம்லின் உங்களுக்கென பலவகை கலைச் சாதனப் பொருள்களை வழங்குகிறது—மெழுகு க்ரேயான்கள், வாட்டர் கலர்கள், போஸ்டர் கலர்கள்—இன்னும் பலப்பல. உங்கள் அருகாமையிலுள்ள வியாபாரியிடம் கேட்டு வாங்குங்கள்.





கேம்லின்

கலர் பென்சில்களையும், இன்ஸ்ட்ரு-மெண்ட் பாக்ஸையும் வாங்குவீர்



கேம்லின் ப்ரைவேட் லிமிடெட்,
ஆர்ட் மெட்டீரியல் டிவிஷன், ஜே. பி. நகர்.
பம்பாய் 59 ஏஎஸ்,
இந்தியா.